கொங்கு

V1. No. 18    3 May 1928

JL
ஊ211, N128 KN
N 28.1.18.
189001.

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
பற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928௵ மேமீ 3உ [No. 18.

OFFICE OF THE REGISTRAR ... No. 20 NOV 1928 MADRAS

18900

பொருளடக்கம்.


| | | பக்கம். | | | பக்கம். |
|---|---|---|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 341 | 5. | கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A. B. L. | 351 |
| 2. | காந்திமதி (A novel) T. N. சேஷாசலம் B. A. B. L. | 343 | 6. | அடி முதற் படி K. S. வெங்கடரமணி M.A., B.L. | 354 |
| 3. | சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A. B. L. | 346 | 7. | பிரடரிக் நீஷேயன் T. R. இராஜகோபால் | 355 |
| 4. | தமிழ்ப் பாடம் | 349 | 8. | வர்த்தமானம் | 358 |


## கலாநிலயம்.

### புத்தகம் போற்றல்.

புத்தகம் பயிலா வீட்டில் பொலிவில்லை பயனுமில்லை. சிறியதோ பெரியதோ ஒரு புத்தகச்சாலை (Library) வைத்துச் சேமியாதார் மனையின்கண் வேறென்ன விருப்பினும் அதற்கு மாண்புண்டென நினைப்பதுவும் ஒண்ணுமோ! புத்திரர் நடமாடாத வீடுபோலவே புத்தகம் நடமாடாத வீடும் கல்லும் மண்ணும் மரமும் நிறைந்திருப்பனவே யன்றிச் சொல்லும் எண்ணும் அறமும் அற்ற வெற்றிடங்களே யாகின்றன. வாய்விட்டு ஒருபோதும் சிரித்திராத ஒருவனை நம்பவேண்டா, என்றனர் ஆங்கிலப் பேரறிஞர் கார்லைல் என்பவர். இசையின் இனிமைக்கு ஈடுபடாதவன் சதிசெய்யும் வஞ்சகக் கள்வனே என வைதனர் ஷேக்ஸ்பியர் மகாகவி. இவ்விருவாளவு கடுஞ்சொற்கள் கையாளும் உரிமையேனும் இஷ்டமேனும் எமக்கில்லை யெனினும் புத்தகத்தை ஒட்டி யாமும் ஒன்று கூறுவோம். யாதானுமொரு புத்தகத்தைச் சிலநேரமேனும் படிக்காமல் ஒருநாள் கழிகின்றதில்லை என்னும் வழக்கம்படிந்த வாழ்க்கையுடைய வொருவனை எதற்கும் நம்பலாம்; எவரையும் சதிசெய்யான்; வஞ்சகக் கள்வன் ஆகவே ஆகான்.

உணவின்றி உடல்வளராதென்று நமக்கும் தெரியும்-மிருகங்களுக்கும் தெரியும். உள்ளமும் அதற்குரிய உணவின்றி வளராதென்பது-(மிருகங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ யாமறியோம்)-நம்மில் எத்தனைபேருக்குத்தெரிந்திருக்கின்றது? யாக்கைக்கு சோறும் நீரும் எவ்வளவு அவசியமோ அதைவிடப் பதின்மடங்கு அவசியமாயிற்றே மனதிற்குப் புத்தகங்கள்! நாடோறும் புத்தகத்தின் பதம்பார்த்து நல்லமுது அருந்ாதவன் வாழ்க்கை, இத்தனை பசி இத்தனை தாகம் இத்தனை விருப்பு இத்தனை வெறுப்பு எனத் திரியும் ஒரு யாக்கையின் வாழ்க்கையே யன்றிப் பெறுதற்கரிய மானுடவாழ்க்கையின் பயனை அவன் எள்ளளவும் எய்தியுள்ளான் என்பதற்கோ சற்றேனு மாதாரமில்லை. முற்றுங்கற்று மோனநிலையெய்திய முனிவர்களை நாம் இங்குக் குறிக்கவில்லை. புத்தகக்கல்வி இலரேனும் கேள்வி நலத்தாலும் சான்றோர் சகவாசத்தாலும் பரம்பரை மாண்பினாலும் இயற்கையாய்ப் பிறவியோடியன்ற தூய்மையாலும், 'கல்லாதபேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்' என்று கொண்டாடுவதற்கு இலக்காகும்படி சிலர் இருக்கின்றன ரென்பதும் யாம் அறியாத தொன்றல்ல. அன்னவரும் எம்முரைக் குறியாகார்.

இவ்விருதிறத்தோரும் அல்லாத ஏனையோர் புத்தகத்தைப் புறக்கணிப்பவராயின் அவர் வாழ்க்கையின் பயனை அறவே துறந்தவர்களாகின்றனர் என்பதற்கு ஐயமில்லை. தம் வரையில் துறப்பது ஒன்றேயோ! மற்றவர்க்கும் அவர்களால் எவ்விதப் பயனும் ஆற்ற இயலுமென்று எண்ணுவது வெறும் பாத்திரத்தை வாய்வைத்துச் சுவைப்பதை யொக்கும். அவர்களிடத்தில் பொதுஜன நலமொன்றும் எதிர்பார்த்துப் பயனில்லை. அவர்களை எதற்கும் நம்பலாகாது.

காகிதத்தைக் கரியாக்கிக் கற்றையாய்க் கட்டிவிட்டால் அதற்குப் புத்தகம் என்ற பெருமை அந்த மாத்திரையிலேயே வந்து விட்டதென்று எண்ண வேண்டா. அச்சு எந்திரம் வந்தாலும் வந்தது, குப்பைக் காகிதத்திற்குக் குறைவில்லை. முன்னாள் புலவர்களின் நூல்களைப் பதிப்பித்து வெளியிடுகின்றனவும் அவைகளை ஆராய்ந்து விளக்குகின்றனவும் தவிரத் தமிழ்வரையிலே மற்றப் புத்தகங்களில் நூற்றிற்குத் தொண்ணூற்றென்பது விற்பதற்கு எழுதினவைகளேயன்றி வாசிப்பதற்கல்ல. ஆயின், அவை குப்பை மேட்டிற்கல்லவோ போதல் வேண்டும், என வினவுவீராயின்—ஆம், பள்ளிக்கூடங்களில் பாடமாக வைக்கின்றனர். இப்போதிய முறையில், மேல் எழுந்தவாறு படிப்பதற்கென்றே பட்டங்கட்டிச் (Non-detailed Study) சில புத்தகங்கள் வேண்டியிருக்கின்றனவே. அதற்கு ஒன்றுமே படித்திராதவர் எழுதுகின்ற புத்தகங்கள்தானே ஏற்றவை. அல்லாது, பண்டிதர்கள் சிலர் புத்தகங்கள் எழுதுகின்ற காலையிலும் இந்நாள் பாவம் இப்பள்ளிக்கூடப் பிள்ளைகளை நினைத்து நினைத்து நாவூற எழுதுகின்றார்களாதலால் அவர்களும் "மேல் எழுந்தவாறே" எழுதவேண்டி இருக்கின்றது. அக்காலம் பண்டிதர்கள் வள்ளல்களை அடுத்துப் பிழைத்தார்கள். இக்காலம் பிள்ளைகளை அடுத்துப் பிழைக்கின்றார்கள். இவை புத்தகங்களல்ல கடன்பத்திரம்.

இனி இந்த நாவல்களொன்று காணக்கரிக்கும் காகிதக் கற்றைகள். ஒருநலமும் ஒரு சுவையும் ஒருபயனும் அல்லாத் தன்மையில் தற்காலம் வெளிவரும் ஆங்கிலநாவல்களுக்கும் தமிழ்நாவல்களுக்கும் பெரியதொரு பேதமில்லை. தமிழ் நாவல்களில் இலக்கணம் படுகின்றபாடு ஆங்கில நாவல்களில் படாமல் தப்பி விடுகின்றது. ஆங்கிலத்திலே ஸ்காட், எலியட், மெரிடித், போன்ற மேதாவிகள் இலக்கியமரபில் எழுதிய நாவல்களின் காலம் கழிந்துபோய் விட்டது. அவைகளைத் திரும்பிப் பார்ப்பார் தேடலரிது. இலக்கிய மரபில் எழுதிய நாவல்கள் தமிழிலும் ஒன்றிரண்டு தேடினால் கிடைக்கலாம். இன்னவைகளைப்பற்றி யாவரும் பழிகூறார். மற்றுச் 'சுவறு' என்றும் கார்த்தான்' என்றும் 'கேழ்ப்பேன் என்றும், 'இன்னாள்' என்றும், வல்லினம் நினைத்த இடத்தில் மிகுந்தும் மிகாமலும், பிழை எழுதுபவர் நூலிற்குள் எத்தனை யளவு கருத்திருந்தும். இலக்கணப் பிழைகள் இல்லாவிடத்தும், கதையின் சுவைதான் நினைத்தமனம் கைக்கும் கைக்காத விடத்தும் கதையைப் படித்த சுவை அக்காகிதத்தை மென்றாலும் கிடைக்கும். இவைகளும் புத்தகங்களல்ல. வைக்கோல் புரி.

தொழில் சம்பந்தமாக இருக்கும் சட்டம் வைத்தியம் போன்ற புத்தகங்களும் புத்தகங்களாகா. தச்சனுக்கு உளியைப்போலும், இடையனுக்குக் கைக்கயிறுபோலும், தையற்காரனுக்கு ஊசியைப்போலும் அவை தொழிலிற்கு உரிய கருவிகள். இவைகளும் புத்தகங்களல்ல. உளியும் ஊசியும்.

தினசரி வர்த்தமானப் பத்திரிகைகள் புத்தகம் என்ற பேர் எடுக்கவில்லை யாதலால் அவைகளைப் பற்றி நாம் இங்குப் பேசவேண்டியதில்லை. "வர்த்தமானப் பத்திரிகைகளைப் படித்துக் கழிக்கின்ற நேரத்தை மெள்ள மெள்ள உத்தம நூல்களைப் படிப்பதற்கு மாற்றிக்கொள்வீர்களானால்.........." என்று அறுபது வருடங்களுக்குமுன் எமர்ஸன் என்னும் பெரியோரே தொடங்கிய வாக்கியத்தை "இதைச் சொல்ல யார் துணிவர்" என அஞ்சி முடிக்காது விடுகின்றார் என்றபின், இந்நாள் அதனை எடுத்திங்கு எழுதியதுடன் எம் கடமை முடிகின்றது.

புத்தகங்களென்று யாவரும் வைத்தற்குரியன புலமைசான்ற பெரியோர் ஆக்கிய நூல்களே. கம்பரும் ஷேக்ஸ்பியரும் காளிதாஸனும் இன்னவர் மரபைச்சேர்ந்த எண்ணிறந்தோரும் நம்முறவை வறிதே தேடியலைகின்றனர். மெய்கண்ட மேன்மையர் இவர்களைக் கைகடக்க விட்டுவிட்டுச் சும்மாத் திரிவதென் சூழ்ச்சியோ. ஒன்றிரண்டு ரூபாய்க்கு இப்பெருந்தகைச் செல்வியோர் இன்றைக்கும் நம்மோடு உடன்வாழக் காத்திருக்கின்றனரே. நமக்கு ஓழிந்த நேரம் பார்த்திருந்து உரையாடவும் காத்திருப்பர். எப்பாஷைப் புலவர்களேனும் அவர் தம் நூல்கள் வீட்டிலிருந்தாலுமே மங்களமாயிற்றே. உண்மையே நோக்கின் இன்ன நூல்களைப் பலர் படிக்கப் பட்டாதென்ற காரணத்தால் விலக்கிவைத்தவரல்லர். வீட்டினில் அவை வந்து சேருமானால் ஒரு நாளல்லாமற்போனால் ஒருநாள் படிக்க முயலாது போகார். பழக்கக் குறைவினால் முதல்தரம் எடுத்தபோது படிக்க முடியாமற் போனாலும் பத்துதரம் எடுத்தெடுத்து வைத்துவிட்டுப் பின்னொருதரமேனும் புரிந்துகொள்வதற்கு வேண்டிய முயற்சியைசெய்து கொள்வார்கள். ஆதலால் யாவரும் அந்தக் காலம் தம்மால் படிக்க இயலாதேனும் புத்தகங்களைச் சேகரித்துக்கொள்வது நலம். வீட்டினில் வளர்கின்ற பிள்ளைகள் உயர்ந்த புத்தகங்களைப் பார்த்துக் கொண்டே வளரட்டும். அவைகளின் பேரைச் சொல்லவேனும் பழகிய வண்ணமாய் அவர்களின் மொழி வளரட்டும். இதனால் விளையும் பயன் இவ்வளவென்று சொல்லுதற்கியன்ற வொன்றன்று.

இன்றுமுதல், நண்பர்காள், உங்களுங்கள் மனையினில் புத்தகச் சாலையொன்று அமைத்து வைக்கத் தொடங்குங்கள். பண்டை நாள் இலக்கியங்களும், அவ்விலக்கியங்களைத் தழுவியும் ஆராய்ந்தும் விளக்கியும் இக்கால அறிஞர் எழுதுகின்ற நூல்கள் யாவும் உங்கள் வீடெங்கு மிருக்கட்டும். ஆங்கில மறிந்த தமிழர்கள் இரண்டு பாஷை நூல்களையும் சேகரிக்க வேண்டியவர்கள். ஆங்கிலம் பயிலாத தமிழர் முன்னுரைத்த வகையைச் சார்ந்த தமிழ் நூல்களை இன்று தொட்டுச் சேருங்கள். கடனென்று சொல்லியோ, திருடியோ அல்லது விலைக்குத்தான் வாங்கியோ புத்தகங்களைச் சேகரிப்பது தகும். கடையிற் சொன்ன வழி உங்கள் கருத்தாயின் அதற்கு எங்களாலான உதவி செய்வோம். என்ன புத்தகம், என்னபதிப்பு எவ்விடத்தில் வாங்க வேண்டுமென்று தெரிந்துகொள்ள விரும்புவோர் எங்களுக்கு எழுதினால் யாமறிந்த வரையில் ஆராய்ந்து உவகையோடு தெரிவிப்போம்.



# காந்திமதி என்னும் காந்தாரநாட்டுக் கட்டழகி.

(326-வது பக்கத் தொடர்ச்சி)

## 15. காகமும் மேகமும்.

சூரியனும் பனையளவு மேற்றிசை இறங்க, இரத்தினபுரி மாந்தரெல்லாம் பெரியோரும் சிறியோரும் ஆண்மக்களும் பெண்மக்களும் முதியோரும் இளையோரும் ஊர்காக்கும் பெருந்தேவி திருக்கோயில் முன்றிலின்கண், 'நடமின் நடமின், இடைவிடுமின் இடைவிடுமின், ஒதுங்குமின் ஒதுங்குமின்' எனத் தெழித்தனராய்த் தொக்குக் கூடினர். காளிக்குரிய பூசையாவும் இயற்றியபின் மந்திரவாதி தூபதீப நைவேத்யாராதனைகளைச் செய்து முடித்தான். விச்வகேசரியும் விராடபத்ரனும் சித்ராங்கனும் தத்தமக் கமைத்த ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். பலிபீடத்தருகு கிடத்தியிருந்த தனஞ்சயனது பிரேதத்தின் தலைமாட்டிற் பாஞ்சாலி தன்சிறு குழவிகள் தழுவிய காலளா யழுது நின்றாள். கருணாகரரும் கலாநாதனும் அவளை எவ்வளவு தேற்றியும் தேறிலள். சந்திரசேகரரும் நீதிபதி தனமித்திரரும் சவத்திற்கு எதிரிலமைந்து நேருங் கரியினைச் சோதிக்கக் காத்திருந்தனர். சேனாதிபதி தேவதாரனும் அங்கு மிங்கும் திரிந்து பல காரியங்களைத் திட்டம் செய்துகொண்டிருந்தான்.

நரபாலனது மாளிகையின் ஏவலில் அமர்ந்துள ஆட்கள் பதின்மர் வந்து வரிசையாய் நின்றிருந்தனர். இச்சவகரிச் சடங்குகாட்டும் பண்டிதர் இடியென அதிரும் பறையடிப்போரும் களிறெனப் பிளிறும் காள மூதுவோரும் புடைசூழ ஆங்கணுகிச் சவத்திற்கு நீர் தெளித்து வேப்பிலையடித்துத் திருநீற்றுக் காப்பிட்டு மஞ்சளாடை உடுத்து மந்திர வகைகள் ஓதி முடிந்தபின், சந்திரசேகரர் நரபாலனது ஆட்கள் பதின்மருள் முதல் நின்றவனைச் சோதனைக்குட்படக் கூவினார். அவனும் மருண்ட கண்ணனாய்த் தளர்ந்த காலனாய் அவசமுற்றுத் தடுமாறி இடம்பெயரா ஆற்றாது திகைக்கப் படைவீரர் சிலர் அவனை உந்தியுந்தி முன் கொணர்ந்தனர். தானே கொலைசெய்திலனாயினும் நடந்த கொலையின் விதமெல்லாம் அவனுக்குத் தெரியுமாகையால் அந்நிலையிலே சவகரிச் சடங்கில் தன்னைக் காட்டிக் கொடுத்துவிடுமோ என்னும் சஞ்சலத்தால் துணுக்கமுற்ற அவன் முகத்தையும் நடுங்கிய நடையையும் வறண்ட நாவுடன் சத்தியம் செய்த தடுமாற்றத்தையும் கண்டு கேட்டவரனைவரும் அவனே குற்றவாளி என ஐயமின்றித் துணிந்தனர். கொள்ளியைத் தீண்டுபுகுந்த கடுவனேபோல் அவனும் கையை நீட்டியும் பின் இழுத்தும் பலதரம் பயின்று கடைசியில் அச்சவத்தைத் தொட்டும் விட்டான். புண்வாய் திறந்து குருதி கொப்புளித்திலது; உயர்ந்தேனென அவனுமீண்டான்.

கொலையிழைத்த கொடியோனும் இவனே எனக் கொண்டிருந்தவருட் சிலர் பெருவியப் படைந்தனர். மற்றும் சிலர் தம்மை யிவன் இவ்வண்ணம் பாவனையால் வஞ்சித்தானென வெகுண்டனர். இன்னொருசாரார் தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் எனச் சாதிப்பவராய் 'இச்சடங்கே பொய்'என்று வைதனர். இனி நரபாலனது ஆட்கள் எண்மர் மடியிற் கனமிலாதானுக்கு வழியிற் பயமுமில்லை எனத்தேறி ஒருவன்பின் ஒருவனாய் வந்து சத்தியத்தைச் செய்து சவத்தைத்தொட்டு அகன்றனர். இந்தத்திட்டம் தன் மனந்தனிற் பெறாதவன் ஒருவனே-மகோதரன். மகோதரா, மகோதரா, மகோதரா, எனச் சேனாதிபதி மும்முறை கூவியும் அப்பெயர்க் குடையோன் எனென்னாது இடிபாய்ந்த மரம்போல் நின்றிட்டான். கூப்பிட்டும் வாரதபடியால் அவனே குற்றவாளி எனத் தீர்ப்புச்சொல்ல நீதிபதி ஆரம்பித்த அளவில், நரபாலனது மற்ற ஆட்கள் அவனைத் தள்ளிக் கொணர்ந்து சவத்தினருகிற் சேர்த்தார். தேவதாரனும் முன் எல்லாரையும் கேட்டதுபோல், "எனடா, சவகரிச் சடங்கிற்கு உட்படுகின்றனையா, அல்லது தனிப்போர் புரியத் துணிகின்றனையோ,?" எனவினவ, அவனும் கனவு தெளிந்து கூளிபோல் விழித்து, "எனக்கென்னபயம், இரண்டும் சரியே. ஆனால் தனிப்போர்..." என்று சொல்லவந்தவன் கண்ணில் எதிரிருந்த கலாநாதன் படத் "தனிப்போர் வேண்டா, சவமே தொடுகின்றேன்..." என முடித்தனன். அதன்மேல் மந்திரவாதியும் செய்யவேண்டிய சத்தியத்தின் வாசகத்தை அவனுக்குச் சொல்லி வைத்தான். "பார்காக்கும் பெருந்தேவி, மனத்தினால் வாக்கினால் மற்றென் யாக்கையால் இப்படுகொலையை யான்....." இதுவரையில் மந்திரவாதியுடன் தொடர்ந்து சொல்லிவந்த மகோதரன் நிறுத்திவிட்டு, "மாட்டேன், போமையா, என்ன ஜாலமோ விது, எனக்கென்ன தெரியும்! என்னுயிரைப் படுக்க என்ன பொறி எங்கே வைத்திருக்கின்றீர்களோ...போமையா போம். சமப்போர் செய்வேன், வருபவன் வரட்டும். அவனைக் கொன்றே நான் இவனைக் கொன்றவனல்லன் என்பதை நாட்டுகின்றேன்! எங்கே யென் எதிரி!" என்று கர்ச்சித்தான்.

கூடியிருந்த மாந்தரிடையிற் பெருங்குழப்ப முண்டாயிற்று. இவன் தொடுவதுடன் சவகரிச் சடங்குமுடிந்துவிடுமாகையால் இனி விநோதக்கூத்து எதுவுமின்றி வீடுதானே போய்ச் சேரவேண்டும் என வாடியிருந்தவர் தம் மனக்காட்டில் இப்பொழுது மழை பெய்தது. எல்லாரும் ஒரே கண்ணாய்க் கலாநாதனை உற்று நோக்கினர். போர் 'இந்தா' வென்றால் 'வந்தேன்' என்று தாவிப்பாயும் அக்கலாநாதனது கால்கள் இன்றைக்கோ பின்னிட்டன. எதிர்நோக்கும் முகமிலனாய் நிலம் நோக்கி மெல்லக் கருணாகரரிடம் நகர்ந்தான். இந்தச்சமயம் சந்திரசேகரர் பாஞ்சாலியைப் பார்த்து, "அம்மே, இவன் சவம்தீண்டான், சமப்போர் வேண்டுகின்றான். அவனுடன் பொர நின்சார்பு எவ்வீரனை விதிக்கின்றாய்?" என வினவினர். "சத்தியசீலரும் வீரதீரரும் ஆகி என்விதிமாண்ட கணவற்குச் செறிந்த நட்பொடு பொருந்திய கலாநாதர் அல்லாது..........." என்று பாஞ்சாலி இயம்புமளவில் அவ்வீரனது முகம் நோக்கிச் சங்கையுற்று, "ஐய, கைம்பெண் யான் கதியுமில்லேன், இச்சமப்போர் விடுமின், சவத்தைத் தாமின். பழிகாரன் போகட்டும்!" எனப் பெருமூச்செறிந்தனள்.

கலாநாதன் தனக்கும் அங்கு நடைபெறுவதற்கும் யாதொரு சம்பந்தமும் அறியாதவன்போல் மயங்கி நின்றான். கருணாகரர் அவனது தோள்களைப் பிடித்துக் குலுக்கி, "மகனே, துந்ததோ நின்காது! இருண்டனவோ நின்கண்கள்!" என்றனர்.

"ஐய, அஞ்சினேன்!" என்றனன் கலாநாதன்.

"அஞ்சினாய்! கலாநாதா, அஞ்சினாய்! இம்மகோதரனுக்கு அஞ்சினாய்!"

“மகோதரனுக்கு அஞ்சிலன். போரிற்கு அஞ்சினேன்!”

“ஏன்!”

“இஃது யான் உரையாது உணரீராயின் நீவிருமொரு தந்தையோ! நான் போரிடப் பிணங்குகின்றாள் நும்மகள். எய்தாதென்று யான் கைசோர்ந்த அவள் காதலை இன்றே எய்தினேன் மீண்டுமதை இழக்கவோ!”

“இவ்வளவுதானா நின்சஞ்சலம், மகனே. இச்செய்தியவள் காதிற்கு எட்டாவண்ணம் யான் காக்கின்றேன். எட்டினும் என்! நின் பாண்மகள் திருவிளையாட்டைப் பொறுத்த அவள் இச்சிறு போரைத்தான் பொறாளோ!”

“இன்னும் அஞ்சினேன்!”

“பின்னும் எதற்கு! நின் உயிருக்கேயோ?”

“ஆம்!”

“என்ன ஆம்! அட ஆந்தையே, இந்த மகோதரன் உருவத்தைக்கண்டா உள்நடுக்கம் புகுந்ததுனக்கு! இந்தப்பயத்தால் காந்தியைப்பெற்ற என்னை முகஸ்துதி செய்ய எண்ணுகின்றனை போலும். செத்தவன் தனஞ்சயனல்ல, நீயே செத்தனை. இனி என் மருகனாகும் ஆசையை நின் மனத்தினின்றும் துறப்பாய்!”

“எந்தாய், என்னிலை கண்டும் இரங்கலு மிலீரோ! மகோதரனது உருவேனும் ஆற்றலேனும் என் நெஞ்சத்தை அசைத்திலது. மற்று, இப்போர்க்கு ஆதாரம் ஆற்றலொன்றலதே. மெய்யும் பொய்யும் இது இதுவென வகுத்தற்கன்றோ இச்சமப்போர் ஆயது. இம் மகோதரன்தான் இக்கொலை யிழைத்தான் என்பது எவ்வாறு நிச்சயம். நிரபராதியாயின் இத்தேவியின் உதவியால் அவன் வெல்வதும் வேண்டும். மற்று, வீரமே கொண்டு வெற்றிக்கு இயலாத இப்போரில் என்னுயிரை மாய்க்கவோ உடன்படேன். நேற்று மாலையாயின் என்னுயிரும் ஒரு பொருளென்று உணர்ந்திலேன். இன்று காலை காந்திமதியின் இன்னருள் அடங்கலும் எனதே ஆயபின் இந்தமந்திரச் சண்டையின் மாயத்தால் வாளா மாள முடுகிப் புகேன்!”

இன்னவாறு இவ்விருவரும் தனியிடம் சேர்ந்து பிறர் கேளாவண்ணம் பேசினரேனும், கலாநாதனது முகக்குறியால் அவன் போர்க்கு இசைந்திலன் என்பதைப் பாஞ்சாலியும் மற்றுளோரும் அறிந்தனர். சந்திரசேகரர் பாஞ்சாலியிடம் வந்து, “நின் சார்பு பொருவதற்கு ஓர் சேவகன் இலனாயின் சொல்வாய்.” என்றனர். அவளும் சிறிதுந் தாழாது, ‘உளன்’ என இயம்பினள். அவர் மீண்டும், “யார்?” என, இவள் தன் மூவாண்டுப் பாலகனை முன்னிறுத்தி, ‘இவன்’, என்னு மளவில் அங்கிருந்தோர் மயிர்பொடித்தன. பொள்ளெனச் சிரித்தனன் அம் மாயாப்பழிபூண்டமகோதரன். “ஐயன்மீர், என்னுரை எள்ளாதீர். மைந்தா, நின் தந்தையைச் செற்றோன் பழியை நீயே தீர்ப்பாய். சுரக்குமென்முலைப்பாலைப் பின்னுஞ் சற்றுப்பருகிச்செல். பத்தினியே யானாயின் நீயேவெல்வாய். விளிந்தாயேல் நின்வயின் பேரன்பு பெருகிய உந்தைக்கு வழித்துணை போ. அல்லிற் பதுங்கி ஆட்கொலை செய்தான் இப்பதியினில் ஓர்பாதகன். ‘செல்வம் தருவல்செற்றந் தாங்கேல்’ என உயிர்விலைபேசினான் இந்நகர் ஓர்மன்னவன். போர்தனக்கஞ்சிப் பேடிக் கோலம் பூண்டனன் இவ்வூரகத்தோர் வீரன். அன்னவர் முன்பு ஆருயிர் மைந்த, நீயே சென்று அடுபோர் புரிந்து ஈன்றோர்க்குரிய இருங்கடன் முடித்தி!” என்றனள் அரற்றியப் பாஞ்சாலி கலாநாதனை யுற்று, “ஐய, நுந்தம் கடந்த நட்பைக் கருதி உமது வாளிற் பாதியேனும் இப்பாலகற்கு உதவி வைப்பீரோ?” என வேண்டினள். வேந்தன் விழிநீர் பலபல உதிர்ந்தன. “நினக்கென உயர்த்திய நெடுவாள் அப்பேதையின் கழுத்தினில் விழுந்தது மறந்த பாவி, போ, போ,” எனக்கருணாகரரும் கலாநாதனைத் தகைந்தனர். பாஞ்சாலியின் சிறு பையனும் பயந்து, “அம்மா, இதுவென்ன! பயமாயிருக்கின்றதே, எம்மாதுலர் கலாநாதர் எங்கே?” என்று விம்மினன். அம்மூர்க்கன் மகோதரன், “வாடா, வாழைப்பழமே, உன்னை விழுங்கிவிடுகிறேன் வாடா,” என்றழைத்துத் தன் பேழ்வாய் திறந்து சிரித்தான். அச் சிறுவனும் ஓடிக் கலாநாதனது கால்களைக் கட்டிக்கொள்ள அவனும் ஒரு குதி குதித்துப் பாய்ந்தப் பாதகனின் உந்தியில் தன் முட்டியால் ஒரு குத்து ஏவினன். மகோதரனது கண்கள் சுழன்றன. அவன் கலாநாதனது குஞ்சியைப் பிடிக்கப் புகுங்கால் தேவதாரனும் தனமித்திரரும் புகுந்து தடுத்தனர். இப்போர் ஏற்க எண்ணியதாகக் கலாநாதனும் கூறினன். “இம்முறை யுன்னைக் கம்பியா, விதியே என்கையில் தந்தது வா, வா,” எனக் குமுறினன் மகோதரன். இருவரும் போர்க்கோலம் கொள்ள ஏகினர்.

சேனைத்தலைவர் சிறிது நேரத்திற்குள் பலிபீடத்திற்கெதிரில் போரிடும் களமும் அமைத்தனர். கால்முதல் தலைவரையில் கவசம்பூட்டி வாளொரு கையும் குந்தமொரு கையுமாய்க் களத்திடை நடந்தான் மகோதரன். கலாநாதனும் வாளும் குந்தமுமாய் வந்தானெனினும் கவசமேதும் தரித்திலன். சந்த்ரசேகரர் அவனைக் கவசமணிந்தே போர்புரிய வேண்டினர். தனது கவசம் வீட்டிலிருப்பதால் எடுத்துவர நேரமில்லை யென்றும் பிற கவசங்களை நம்பி யணியானென்றும், ‘தருமமே உடன்நின்று ஆகமும் தலையும் காவாதேல் அவ்வெஃகு வலியதேனும் யாதுசெய்ய இயலும்’ என்றும், கவசமின்றியே போர்செய்தற்குக் கலாநாதன் துணிந்தனன். எழுகடலும் புடைபெயர்ந்தென அக்கூட்டத்திற் பேரொலி முழங்கியது. “வாழி வாழி கம்பியா வாழி,” என மங்கைமார் பலர் மங்கல மொழிந்தனர். ‘பாஞ்சாலியின் கற்பே நின்னைக் காக்கும் கலாநாதா, அஞ்சாமல் உன் வலக்கால் முன்னெடுத்துவை’ என்றனர் சிலர். ‘கோடாக்கோல் எந்தும் எம்மன்னவனது அறம் பொய்க்காது போ,’ என்று கூவினர் சிலர். எங்கும் கரகோஷம். எங்கும் ஆரவாரம். இடி இடிப்பதுபோலிருக்கும் ஒருவேளை. மழை பெய்வதுபோ லிருக்கும் மறுவேளை. இன்னதற்கிடையில் களம்புகுந்த பகைவர்தம் வாட்கள் அந்தி வெயில்பட்டு மின்னின. எக்காளம் ஊத இருவரும் போர் தொடங்கினர். யானையென அசைகின்றான் மகோதரன், சிங்கமெனப் பாய்கின்றான் கலாநாதன். வெகுநேரம் வரையில் கலாநாதன் தன்னைக் காத்துக்கொள்வதிலேயே கருத்தா யிருந்தானேயன்றிச் சமயமிது எனப் பிறர்கருதிய காலத்திலும் பகைவனை எதிர்த்திலன். ‘கலாநாதன் மனதைச் செலுத்திச் சண்டைசெய்வதாய்க் காணவில்லை,’ என்றனன் கூட்டத்தில் ஒருவன். ‘இரவெல்லாம் தூக்கமில்லையாம் பாவம் அவனுக்கு, ஆதலால் குறியெடுக்க முடியவில்லை போலும்’ என்றனன் இன்னொருவன். “தேச தேசமாய் அலைந்து அவன் வந்து இன்னும் இரண்டு தினமாக வில்லையே”, என்றனன் மற்றொருவன். “அடே, அவ்விராக்ஷஸனும் வாளால் வெகு சாகசம் செய்கின்றான், பார் பார்!” என வியந்தனன் பின்னொருவன். “என், கலாநாதன் எவ்வளவு எளிதில் அவ்வடிகளைத் தடுக்கின்றான் பார் பார்!” என மகிழ்ந்தனன் அவனருகு இருந்தவன். இவ்விதம் வாளொடு வாள் எற்றியும், கதையொடு கதை தாக்கியும், இருவரும் வெல்லாது இருவரும் தோலாது சிலகாலம் அச்சண்டை நிகழ்ந்தது. அங்கு வாய் பேசாது கண்கொட்டாது அப்போரின் ஒவ்வொரு அடியையும் குத்தையும் கருத்துன் எழுதி நின்றவர் கலாநாதனிடத்தில் போர்த்தொழில் பயின்றுவந்த சில மாணவரே. அவர் தவிர மற்றவரெல்லாம் ஒவ்வொருதரம் மகோதரன் கையை ஓங்கும்போதும் கலாநாதன் இத்துடன் மாண்டான் என்று கையற்று விடுவர். இன்னும் சிறிதுபோது ஆனதும் கலாநாதன் இளைத்தே போய்விட்டதாகத் தோன்றியது. அங்கிருந்த வம்பனொருவன் ‘கலாநாதனை விட அப்பாஞ்சாலியின் பாலகனே வென்றிருப்பான்போலிருக்கிறது,’ என்று நகைத்தான். உடனிருந்தவர் சிரித்தனரேனும் அச்சிரிப்பிலும் கவற்சியே மேலிட்டிருந்தது. மகோதரன் மரத்தண்டை ஓங்கினன். ஓங்கிய அடியின் குறியுணர்ந்தும் கலாநாதன் அயர்ந்தவன் போல் நின்றிட, மகோதரன் தன் உயரத்தை நம்பிக் கடுவிசையுடன் அவன் தலைமீது தாக்கக் கம்பியன் இம்மியளவு செவ்வி பிறழாமல் ஈரடி பின்புறம் மான் எனத் துள்ளிக் குதிக்கவே ஓங்கிய அடிபடாமையால் அவ்வேகம் இதுவரையில் கலாநாதனுக்கு எட்டாத தலையைத் தாழ்த்தித் தந்தது. அம்மாத்திரையில் கம்பியன் தன் கைக் கதையால் அவன் பிடரியில் ஓரடி கொடுக்க மகோதரன் மூளை கலங்கிக் குன்றொன்று சாய்ந்ததெனத் தரையில் விழுந்தான். அரைக்கணமாகவில்லை. விழுந்தவன் மார்பில் தன் காலையூன்றிக் கலாநாதன் நிற்கக் கண்டார். மகோதரன் கையிலிருந்த ஆயுதங்களும் எட்டடிக் கப்பால் கிடந்தன.

கூட்டத்திலுண்டாகியகுதூகலத்தைஎடுத்தெழுதுவது எளிதன்று. கவசமற்றவனாயினும் கலாநாதன் உடலில் ஒரு கீறல் காணவில்லை. மகோதரன் எழுந்திருக்க முயன்றான். கலாநாதனது காலின்கீழ்ப் பட்டவனும் கயிலையங்கிரியின்கீழ்ப் பட்டவனும் தவிர்ந்து நிமிர்ந்தது எந்நாள்! களத்தருகு குழுமியவர் எழுப்பிய ஒலியும் சிறிதடங்கச் சித்ராங்கன் “சத்தியமே ஜயம், சத்தியமே ஜயம்,” என்று கூவிய சொற்களும் கேட்டன. விச்வகேசரி யரசனும் தன்னிருக்கை விட்டகன்று இக்காட்சியைக் காண முன் வந்தான். பாஞ்சாலி தன் கண்ணினின்று வடித்த வெள்ளத்தில் தனது குழந்தைகளை முழுக்கி அழுவாளாயினள். நரபாலனது மற்ற ஆட்களுக்குக்கூட இத்தோல்வியில் துக்க மிருந்ததாக அவர் முகம் காட்டவில்லை. தேவதாரரும் தனமித்ரரும் சந்திரசேகரரும் களத்துள்வந்தனர். கலாநாதனது காலழுத்தியபலத்தால் துடித்த மகோதரன், ‘விடுவிடு’எனக்கதறினன். “வெற்றியெனதே என்று நீ யுன் வாயாற் சொல்லாத வரையில் விடேன்,” என்று ஒரு அழுத்து அழுத்தினன் கலாநாதன். “உனக்குப் போர் செய்யத் தெரிந்தாலல்லவோ வென்றது தெரியப் போகிறது,” என்று இரத்தம் வழியும் வாயால் மகோதரன் தேக்கெறிந்தான். இதற்கிடையில் அரசனும் சித்ராங்கனும் விராடபத்ரனும் அங்குவந்து சேர்ந்தனர். தாமோதரன் சிறிது தூரத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

“ஆயின், தனஞ்சயனைக் கொன்றவன் நீயே யல்லனோ?” என்று நீதிபதி கேட்டார்.

“ஆம்...நானே...ஆனால்...”

“மக்காள், நும்மப்பனைக் கொன்றபழி தீர்த்தோம்,” என்றனள் பாஞ்சாலி ஒருபுறம்.

“ஆனால், என்ன?” என்றார் சந்த்ரசேகரர்.

“நான் கொல்ல நினைத்தது வேறொருவனை!” என்றனன் மகோதரன்.

“மற்று, அன்னவன் யார்?”

“இந்தப் பாத்தைமகன் கலா.........நாதனே.”

“அட இரத்த வெறிகொண்ட பிசாசே! நானுனக்கு எத்தீங்கும் எக்காலத்திலும் ஆக்கியிலேனே...என்னுயிர் தேடியதேனடா நீ,” என்று கலாநாதன் கேட்டபோது மகோதரன் தொண்டைக் குழியில் இரத்தம் குமிழியிட்டது.

“எனக்குத் தீங்கிழைக்கா திருந்தாலென்ன! என்னை இக்கொலை செய்ய ஏவியவற்கு இழைத்திருக்கின்றாயல்லவா?”

“இனி. உன்னை யேவியவன் யார்?”

சித்ராங்கன் தன்வாயில் கையைவைத்துச்‘சொல்லாதே’ என்னும் சமிக்ஞை மகோதரனுக்குப் போக்கினன். இது கண்ணிற்பட்ட விராடபத்ரன் அரசனை மெள்ளத் தொட்டழைத்துச் சித்ராங்கன் போக்கிய அச்சமிக்ஞையைக் காட்டினன். அரசனது உடல் வியர்த்தது.

“சொல்லவேண்டா வெனக் கைமறிக்கும் இச் சித்ராங்க இளவரசரே என்னை இக்கொலை செய்யுமாறு ஏவினர்,” என்று வாய்கூசாது மகோதரன் மொழிந்திட்டான்.

மொழிந்த மொழி செவிபுகாமுன் ஆங்கிருந்தவர் தம் மனநிலைதான் உற்றதோர் தடுமாற்றத்திற்கு அவதியுண்டோ! “அட துஷ்டா, இவ்வபவாதம் எனை நீ சொன்ன நாவுடன் இனி இமைப்பொழுதிருக்கத் தரிப்பனோ!” என இறைமகன் தரையிற்கிடந்த மகோதரன் மீது வாள்கொடு தாவ, அணித்தலைவர் அவனைத்தடுத்து, “இளவரசே, நானென் கடமையைச் செய்யவேண்டியவனாகையால் இதற்கு இடந்தரேன். தூக்கு மரத்தில் தொங்குதலல்லாது இப்பாதகனுக்கு யாராலும் எவ்விதத் தீங்கும் நேர்தல் கூடாது. ஆதலால் விலகுமின்,” என விலக்கினன். தாமோதரன் எங்கெங்கும் திரிந்து எல்லோரிடத்திலும் “பார்த்தீர்களா, நீங்களே பாருங்கள். காந்தாரநாட்டு மகுடஞ்சூடி மன்னுயிர் காக்க விருக்கும் இக்கோமகன் தொழிலை, நீங்களே பாருங்கள்,” என்றெடுத்துக் கூறிவிட்டு மேல் நடப்பதற்கு இருப்பன உன்னித் தூக்குமரம் நட்டிருந்த களம் நோக்கிப் போய்விட்டான்.

விராடபத்ரனிற்கோ விஷயம் விளங்கவில்லை. சித்ராங்கன் கலாநாதனைக் கொல்விக்க ஒருபோதும் முயன்றிரான் என்பது அவனுக்கு நன்றாய்த்தெரியும். “ஆயின் இம்மகோதரன் கூற்று முழுப்பொய். எனின் அவனேனதைச் சொல்லவேண்டும். அவனுக்கு அதனால் என்ன பயன்? ஒன்றுமில்லை. ஆதலால் வேறொருவன் கற்பனையால் மகோதரன் இது கூறியிருக்கவேண்டும். அது கற்பித்தவன் யாவன்! நரபாலனாகத்தான் இருக்க வேண்டும். சித்ராங்கனைப் பழிப்பதால் நரபாலனுக்கு என்ன பயன்!...ஓகோகொ! நேற்று நான் குறித்தனுப்பின நிருபத்தில் கண்ட சூழ்ச்சிக்கு உடன்பட்டே இது தொடங்கினன் நரபாலன்,” எனத் தன்மன மாராய்ந்து தேறினனெனினும் அச்சமயம் தான் எதுசெய்வதென்பதுணராது கலங்கினனாகி, இவ்வபவாதத்தை வளர்ப்பதோ என்று ஒருபோது எண்ணுவதும், நரபாலனை நம்பியொரு கருமம் கடைபிடித்தல் மோசமே யன்றோ என மறுபோது தயங்குவது மாயினன். காகம் மேகத்தைக் கரியதென்றழைத்தல் இப்புவிதனில் புதுமையுமன்று. எது எவ்வாறு இருப்பினும் எளிதில் கிடைத்த இவ்வமயத்தை வாளா நழுவவிடுதல் மதியுளோற்கு ஏற்றதன்றென ஓர்ந்து, “மைந்தா, தேவதாரரது சொற்கிணங்கி நீ சும்மாவிருப்பின் உலகு என்நினைக்கும். இக்கயவனை நின்கையுடை வாளினால் கூறுகண்டு பிறகு இவ்வூர்ச் சனங்கள் அனைவரும் கேட்க இவனுரைத்த மொழியெல்லாம் வீண்பழியே என்று நின்வாய் கொண்டம்

டும் உன் நாவரையில் எட்டிய சத்தியம் செய்துமறுப்பாய். நீயாளும் குடிஜனங்கள் திகைப்புண்டு விழிக்கும் விதத்தைப்பார்......அவர்கட் கருகுசென்று நின்மொழி சில புகன்றுவா......போ சித்ராங்கா, இவ்வடாப்பழியை மறுத்துவா," என விராடபத்ரன் சித்ராங்கனது தோள்களைப் பிடித்து மெல்லத் தள்ளினன்.

இதனால் விராடபத்ரன் பலாறியத் தன் குற்றத்தை ஸ்தாபிப்பதற்கே சூழ்கின்றான் என்பது சித்ராங்கனுக்கு வெகு எளிதில் தெரியலாயிற்று. நரபாலன் முன்னாள் கூறியுளதை மறந்திலன். ஆதலால் விராடபத்ரன் வைத்த கைகளைத் தன் தோளினின்றும் உதறி எறிந்து, "ஐய, கொலைத் தீயனிவன் சொல்லிற்கு எனதரச வாக்கையும் எதிர்ப்பணையம் வைத்தல் வேண்டுமோ! காந்தாரநாட்டு இளவரசன், கதிரவன் குலமுறை பற்றினேன், இக்கம்பியன் உயிரைக் காந்துகொல்ல ஏவினனென எண்ணற்கிசையும் கயவன் ஈங்கொருவன் உளனுபின் இப்பேய் மொழியைப் பொய்யென்று கொள்ளாது களிக்கட்டுமே!" எனச் சொல்லிச் சித்ராங்கன் நிமிர்ந்தனன்.

"ஐயன்மீர், இப்புன் மொழியை யான் மெய்யெனக் கொள்ளேன். வாக்கினாலேனும் நோக்கினாலேனும் நானிக் கோமகற்குப் பிழைத்தவனல்லன். ஆதலால் இவ் விழிதகைச் செயற்கவர் சிறிதும் இணங்கார், திண்ணம்," என்றனன் பெருந்தகைக் கம்பியன்.

மண்ணிற் புழுவென நெளிந்த அக்கொடியோன், தன்னைத் துமித்த கால்களைக் குலுக்கி, "ஏ, கம்பியா, வாக்கும் நோக்குமன்றிப் பிழைக்கும் வழி வேறுதான் இல்லையோ! புரசைமா வீதிப் புழுதியில் புரட்டி நின் காலால் மண்ணொடு பிசைந்தது இருதினங்களுக்கு முன் யாரையோ! இளவரசற்கு இழைத்த பிழைதான் ஆகாதோ அது! இது அவர் பொறுப்பதும் இயற்கையோ......பேசடா!" எனக் குருதிகலந்த சொல் சில பொழிந்தான்.

இதுகேட்ட கலாநாதன் மகோதரனை உதைத் தொரு புறம் தள்ளிவிட்டு, "எம்பெரும, இத்தீயவன் கிடக்க, அக்காளியே கூறினும் நானதை நம்பேன். மாசிலா நுங்குல முதல்வனுக்கொரு மறு தீட்டுவோன் சித்ராங்கனல்லன். அவ்விரவு எளியனேன் இழைத்த பிழை பொறுத்தி!" என வணங்கினன். சித்ராங்கனது தாமரைபோன்ற கண்களில் முத்தென நீர்த்துளி உருண்டன. செல்வக் கம்பியனைத் தன் மார்புறத் தழுவினன். "கம்பியா, நீயே உத்தமன். வாய்மையென்பது புலனறி பொருளன்று. மனமே கரியாய் அன்பே காட்டும் ஆக்கமென் றறிந்தேன். நினக்கு யான் தருதற்கொத்த கைம்மாறு தேடலரிது. எனதாருயிர்த் துணைவனுபினை" என்று இன்னவண்ணம் பரிவு மொழிகள் புகன்றகலுங்கால், சந்திரசேகரர் தனமித்திரர் தேவதாரர் ஆயினோர் ஆண்டிருந்த பிரபுக்கள் அவனை வணங்கி "இத்தீமையை மெய்யெனக் கொண்டிலம். ஐய, நரபாலன் ஏவிய தூறேயன்றி நீ யிழைத்த செயலிது ஆகாது. வருந்தல்," என மெய்யன்பொடு மொழிந்தனர். கடலிற் கவிந்தவன் போல் கலங்கிய சித்ராங்கனது நெஞ்சிற்கு இவ்வுத்தமர் அளித்த வார்த்தைகள் அளவிறந்த ஆறுதல் தந்தன. "பிரபுக்காள், இந்நாள் மாரி சில பெய்வதும் நும்மனோர்விழுப்பத்தாலன்றோ"! எனத் தன்னிருகண் மாரியுடன் கலந்து முகமன் கூறிச் சித்ராங்கன் அக்களம் விட்டேகினன். முன்னரே தன் தந்தையும் விராடபத்ரனும் போய்விட்டனரென்பதறிந்து அவன், "என்னை இகழ்ந்தல்லவா தனிவிட்டகன்றனர் எந்தை" எனக்கலுழ்ந்து, மடத்திற்குச்செல்ல மனங் கொள்ளானாய் அங்குமிங்குந் திரிந்து கடைசியில் குண்டிலினி யாற்றங்கரைக்குப் போய்ச் சேர்ந்தனன். அங்கு அந்த ஆற்றின் சிற்றலைபோல் பல சிந்தனைகளால் தெற்றுண்ட மனத்தனாகி இருள் சூழ்காறும் மணலிற் சாய்ந்து மாதுயர் கொண்டு இக்கோமகன் மாழ்கினனயினன்.

T. N. சேஷாசலம்.

# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

## பொருள் ஆராய்ச்சி.

### அன்பு ஆராய்ச்சி.

[329-ம் பக்கத் தொடர்ச்சி]

### அன்பே சிவம்.

**அவா அன்பாதல்:**—இனி, அவாவினை அன்பாக மாற்றுவதென்றால் என்னை? அவாநிலையில் தான் என்பது தனித்து முனைந்து நிற்கின்றது. அன்புநிலையில் இம்முனைப்படங்கித் தான் என்பது மறைந்துபோகவே, பிறர்தாம் கண்ணிற்குப் புலனாகின்றனர். அவாநெறியில் தனக்கென உலகம் உள்ளதாக எண்ணுகின்றான். அன்புநெறியில் உலகத்திற்கெனத் தான் இருப்பதாக நினைக்கின்றான். அவாவில் ஆழ்ந்தவன் பிறர்க்கென வாழாத் தனக்குரியாளன். அன்பில் ஆழ்ந்தவன் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன். அன்புடையோன் தன்னுயிரைப்போல மன்னுயிரையும் நினைக்கின்றான் என்பது அல்ல. மன்னுயிரைத் தன்னுயிர் எனவே நினைக்கின்றான். மன்னுயிர் தன்னுயிர் என்னும் வேற்றுமை உணர்ச்சியே அந்நிலையில் இல்லை.

**அவா நிலை:**—அவா நிலைதான் என்ன? தேமாங்கனி தின்கின்றவன் தேமாங்கனி வாழ்தற் பொருட்டா அதைத் தின்கின்றான்? அதற்கு உடல் நோகுமென்று மெல்லக் குதட்டிச் சுவைக்கின்றானா? இல்லை. தன் நாவிற்கு இனிமைதேடியே இதனைச் சுவைக்கின்றான். ஆடடித்துத் தின்று உடல் கொழுத்துத் திரிவானுக்கு ஆட்டிறைச்சிமேல் அவா உண்டாகின்றது. ஆட்டின் மேல் எண்ணம் ஓடுகின்றது. ஆனால் அவ்வாட்டின் மேலுள்ள அருளினாலேயா அதைப்பற்றி அவன் நினைக்கின்றான். அல்ல அல்ல, அதனைப் பதைக்கப் பதைக்கக் கொன்று அதன் கொழுத்த தசையைக்கொந்தி யறுத்துப் புலாலைமறைக்கப் புதுமண மூட்டி, நெய்யிலிட்டு வறுத்தெடுத்துச் சுவைத்துச் சுவைத்து உண்ணவே யல்லவா எண்ணினான். தன்னுடல் பருத்துப்பெருகவே யல்லவா எண்ணினான்? ஆடு வருந்தித் துடிதுடிப்பது கண்டு அணுவளவேனும் அவன் நெஞ்சம் நெகிழ்ந்திறங்கி ஐயோ என்பதில்லை. நன்றாய் இருக்கும் என நாக்கைத் தட்டுகின்றான். ஆடு நனைகிறதென்று ஒனாய் குந்திக்குந்தி அழுவதில்லை அதோடு போகின்றதா? அவற்றை யெல்லாம் ஆண் மகன் தின்னவே ஆண்டவன் படைத்தருளினான் என எழுதிவைத்துக் கொள்கின்றான்.

**அன்பு நிலை:**—இனி அன்பு நிலையைக்காண்க. பெற்ற தாயானவள் தனது பிள்ளையோடும் கொஞ்



சிப்பேசி யிருந்தாள். அகமுடையான் அழைத்ததும் போயினாள். மறுபடியும் திரும்பிவருகிறாள். அப்பிள்ளையை மெல்லிய பஞ்சணையில் வளர்த்தி விட்டு என்ன காண்கின்றாள்? அந்தோ இதற்குள் அவ்வீடு பற்றி எரிகின்றது. தான் பத்து மாதம் சுமந்துபெற்ற பால்மணமாறாப் பச்சிளங் குழந்தை அதற்குள் படுத்துறங்குகிறது. கண்டனள் தாய். உள்ளே புகுந்தாள். உடனே சாம்பராய்ப் போகத்தான் வேண்டுமென்பதும் தெரியும். பெற்ற மனம் பித்து. புடவைபற்றி எரிய எரியப் புலிபோலப் பாய்ந்தாள். இவ்வாறு செய்தவள் தனக்கெனச் செய்தாளா? தன்னுயிர் என்றும் தன் குழந்தை உயிர் என்றும் வேறுபடுத்திக்கொள்வது அவ்வுயரிய அன்பு நிலையில் இல்லை.

**அன்பே சிவம்:**—அன்புதான் தமிழர் அறிந்த கடவுள். நாம் அறிந்த அன்பெல்லாம் அப்பெரிய தீப்பிழம்பினின்றும் தெறித்த சிறியதொரு பொறியாகும். நமது உள்ளக்குகையில் அணுவளவாகியுள்ள சாளரத்தின் வழியாக அவ்வன்பு "இன்னுழை கதிரே' போல நுழைகின்றது. அச்சாளரத்தைச் சிறுகப் பெருகவைத்து நம் முள்ளத்தையே வெட்ட வெளியாக்கி உள்ள முழுதும் அன்பாக, அன்பு வெள்ளத்தில் அழுந்தி இறைவனோடு இயைந்து இழைந்து போதலே இன்பவழி. குளத்திலே ஒரு கல்லினை வீசி எறிகின்றோம். அவ்வசைவினாலே, வட்டமான திரைகள் கல்லைச் சுற்றிலும் நின்று தோன்றிச் சிறுகச்சிறுகச் சுற்றிச்சுற்றி அகன்றுகொண்டே போய்க் கரைவரையிலும் முட்டிப் பின்னர்க் குளத்தொடு குளமாய் ஒன்றுபட்டு நின்று விடுகின்றன. அங்ஙனமே உலகின் இடையிலே ஓங்கி உயரவீசி எறியப்பட்ட நாமும் நாம் வந்து வீழ்ந்த இடத்திலிருந்து நமது அன்பினைச் சிறுகச்சிறுக அக்கம் பக்கத்திலும் சுற்றுமுற்றிலும் பரவச்செய்து வருகையில் உலகு முழுதுமே நமது அன்பில் ஆழப் பின்னர் எல்லாமாகும் கடவுளும் அன்பிலாழ்ந்த அந்த நிலையில் அவரோடு நாமும் ஒன்றாய் உருகி வழிந்து இன்பந்திளைக்க வேண்டும்.

### குறளும் அன்புவழியும்

இவையெல்லாம் நாம் போடும் வாய்ப்பந்தர் அல்ல. தமிழரது மரபாகும். இவ்வழியினைத்தான் தெய்வத்திருக்குறள் விரித்துரைக்கின்றது. உண்மை அன்பினை உயர்ந்த அந்தணரிடத்தில்தான் காணலாம். ஆனால்,

> அன்பீனும் ஆர்வமுடைமை மற்றது வீனும்
> நண்பென்னும் நாடாச் சிறப்பு.

அவ்வன்பின் நிழலையோ, இல்வாழ்க்கையில் அப்போதும் இப்போதும் சிறிது சிறிது காண்கின்றோம். நின் மனைவி மக்களிடம் அன்பு பாராட்டு என்று இடித்துரைத்தல் இக்காலத்தில் வேண்டியிருந்தாலும், அதனை எல்லோரும் உணர்ந்துள்ளார்கள். ஆகவே அதனைக் குணமெனும் குன்றேறிப் போவதற்கு முதற்படியாகக் கட்டியமைத்தார் நமது திருவள்ளுவர் என்னும் தெய்வத் தமிழர்.

> மங்கலமென்ப மனைமாட்சி மற்றதன்
> நன்கல நன் மக்கட் பேறு.

என்று மனைவி மக்களின் பெருமை கூறி நமது மனதினை அவர்களிடத்தே இழுத்துச் செல்கின்றார்.

> அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது.

என்று அவ்வில்வாழ்க்கையில் அன்பு இன்றியமையாதென அறிவித்தார் என்கின்றார்.

அறம் என்பது தொழில் - அன்பு என்பது பண்பு. எங்கு அன்புண்டோ அங்கு நிகழும் தொழிலே அறம். அன்பு இல்லாவிடத்து எல்லாம் வெளிமயக்கும் பொய்யொழுக்கமுமாய்ப் போய் ஒழியும். தலைசிறந்த மக்கள் உள்ள நிலையாகிய செந்தண்மையை நோக்க அந்தணர் எனப்பெயர் பெறுகின்றனர். அவர்களது தொழிலை நோக்க அறவோர் எனப்பெயர் பெறுகின்றனர். தொழிலற்றுநின்ற தூயநிலை யடைந்ததுறவோர் அந்தணர் ஆதலின் அவர் செய்யும்வெறுந் தொழிலெல்லாம் அறமேயாகும். பழுத்த அன்பு எங்கு உண்டோ அங்குத்தான் உண்மை யறமும் உண்டு. "உலகோபகாரம் ஞானிகள் விவகாரம்" ஆதலின் அவர்கள் அறம் எல்லாம் அன்பன்றிப் பிறிதில்லை. இதனாலன்றோ,

> அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுக லான்

என்று கூறினார் திருவள்ளுவனார். செந்தண்மை (அன்பு) பூண்டு ஒழுகுதலே அறமாகும் என்பதை தெளிவுறுத்தினார். அத்தகையார் வழிபட்ட கடவுளும் அவ்வாறுதானே இருத்தல்வேண்டும். கடவுளையும் அறவாழி அந்தணன் என்றுதான் குணங்குறி கூறி நிலைநாட்டுகின்றார்.

அன்பு என்பது முடிவான வீட்டு நிலையாவதோடு முதலான வீட்டுநிலையும் ஆகின்றது என்பதை அறிந்த தெய்வப்புலவர் இல்லறத்தில் அன்பின் இன்றியமையாமையை எடுத்துரைத்தார். பின்னர் வீட்டைவிட்டு வெளியேறி உலகை எல்லாம் காணச்செய்து நண்பினரிடத்து அன்பு பாராட்ட வேண்டுமென்பதை வற்புறுத்துகின்றார்.

இதற்குப் பரிமேலழகியார் கூறுமுரை குறித்து வைத்துக்கொள்ளத்தக்கது "ஒருவனுக்குத் தொடர்புடையார் மாட்டுச்செய்த அன்பு அத்தன்மையாற் பிறர் மாட்டும் விருப்ப முடைமையைத்தரும். அவ்விருப்ப முடைமை இவற்குப்பகையும் நொதுமலும் இல்லையாய் யாவரும் நண்பென்று சொல்லப்படும் அளவிறந்த சிறப்பினைத் தரும்" மனைவி மக்களிடத்தே அன்பாய் இருக்கப்பழகியவனுக்கு மற்றவர் இடத்தும் அன்பாய் இருத்தல் எளிதில் கைகூடும். படிப்படியாய் எல்லோரிடத்தும் நண்பு பாராட்டிப்பார்முழுதும் அன்புருவாய் விடும். யாம் எழுதி வருங் கொள்கையினை இக்குறளும் இதனுரையும் நன்கு விளக்குதல் காண்க.

உண்ணுவதே எல்லோரையும் ஒன்றாக்குவது. விருந்தே அன்பினை அழியாதிருக்கச் செய்யும் மருந்து. ஆனால் அன்பின்றி விருந்தென்பதில்லை.

> மோப்பக்குழையும் அனிச்சம் முகந் திரிந்து
> நோக்கக் குழையும் விருந்து.

முகங்கோணாதிருந்தால் போதுமா? முகங் கொடுத்துப் பேசவேண்டாமா? அன்பராயினார் வாய்மணக்க மன மணக்கச் செவியும் மணக்கப் பேசுஞ் சொல்லில் அன்பும் மணக்கவேண்டாமா?

> இன்சொலால் ஈரமளைஇப் படிறிலவாம்
> செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்.

விருந்தோம்பி இன்சொல் பேசி, அக்கம் பக்கத்து நண்பரிடம் அன்பராய் இருப்பது அத்துணை அருமையன்றே. ஆகவே அதனை மறுபடியாக வைத்தனர்.

இன்பம் தரும்போது அன்பு பாராட்டித் தாராதபோது அப்புறந் தள்ளலாமா? தமக்கொரு நன்றி செய்தவர்களிடத்து அன்பு பாராட்ட வேண்டுமெனச் சொல்லவும் வேண்டுமா? அவ்வாறு நன்மை இழைத்தவர்கள் பின்னொரு காலத்தில் பெரியதொரு தீங்கிழைத்தாலும் அன்பு குறுகலாகாது. முறுகி வளரவேண்டும்.

> கொன்றன்ன இன்னாசெயினும் அவர்செய்த
> நன்று ஒன்று உள்ளக் கெடும்.

ஆகவே அவர் செய்த தீங்கினை விட்டு நன்மையை நினைப்பூட்டிக் கொள்வோமாக. நண்பராயினும், நம்மை அறியாதாரும் தமக்குள் ஏற்பட்ட வழக்கைத் தீர்க்கச் சொன்னால் நமக்கு நன்மை செய்ததை நினைத்து நடுவு நிலைமை தவறி ஒருதலைப் பக்கமாக இருக்கலாமா? இருந்தால் கூலிக்கு மார்படிப்போர் ஆவோம். நம்மை யறியாதாரிடத்தும் அன்பு பாராட்டி நடுவு நிலைமையாய் இருத்தல் வேண்டும். ஆயிரம் போனால்தான் என்ன? வந்தால்தான் என்ன? அன்பும் அறமுமே ஆருயிர்க்குற்ற துணை. கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கணி.

அடக்கம் அமரருள் உய்க்கும். தீயசொற்கள் கூறிச் சினந்துகொண்டு பிறர்மனம் நோகச் செய்வானேன்?

> தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
> நாவினாற் சுட்ட வடு.

தான் அன்பில்லாதவனாகி அழிவதோடு பிறரையும் என் அன்பில்லாதவராக ஆக்கிவிடவேண்டும்.

ஒழுக்க முடைமைதான் அன்புடைய அறவோரோடு நம்மை ஒன்றாகப் பிணித்து விடுகின்றது.

> உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
> கல்லார் அறிவிலா தார்.

உயர்ந்தோர் ஒழுக்கம் அன்பொழுக்க மாதலின் அதன் படி ஒழுகினாலே போதாதா? வேறு கல்வி யேன்.

உடன்பாட்டால் வற்புறுத்திய அன்பு நெறியை எதிர்மறையானும் வற்புறுத்துகின்றார். அன்பிற்குத் தாயகமாகிய இல்வாழ்க்கையைக் கலைத்தொழிப்பது பிறனில் விழைவேயாகும். இதன் கேட்டை எண்ணிக் 'கிடுகிடு' என மனம்நடுங்கி

> "விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தார்இல்
> தீமை புரிந்தொழு குவார்"

எனச் சினந்து 'செத்தார்' என இகழ்ந்து கூறுகின்றார். தமக்குப் பிறர் "பிறனில் விழைவு" போல எத்துணைப் பெரிய தீங்கு இயற்றினாலும் அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலப் பொறுத்தலே சிறப்பு. பொறுத்தலினும் அத்தீங்கினை மறத்தலே மேல். ஏன்? நாம் வேண்டுவது நிலையான இன்பந்தானே.

> ஒறுத்தார்க் கொருநாளை இன்பம்பொறுத்தார்க்குப்
> பொன்றுந் துணையும் புகழ்

அன்புநெறி இன்பநெறி என்பதனையும் இவ்வாறு அடிக்கடி காட்டிக்கொண்டே கைப்பிடித் தழைத்துப் போகின்றார். அழுக்காற்றினாலே பிறர்மேல் வயிற்றெரிச்சல் கொண்டு தீங்கிழைப்பதும் அன்பு நெறியல்ல. அதனால் நன்மையும் இல்லை.

> அழுக்காற்றில் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
> ஏதம் படுபாக் கறிந்து

நெருப்பை அடிவயிற்றில் கட்டிக்கொள்வார் உண்டோ? இனி ஏழையாய் இருப்பான் பிறர்பொருள்மேல் கண்ணாய் எவ்வகையாலும் அதனைப் பெறுவதே இன்பத்தை அடைதற்குக் குறுக்குவழி என நினைத்தால் தன்மனதையும் கொல்கின்றான்; பிறரையும் வாட்டுகின்றான். ஈது அருள் நெறியாகுமா?

> அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்
> பொல்லாத சூழக் கெடும் [வெஃகில்

என்னவரினும் வேண்டாம் என்பதல்லவா ஒருவனுக்குப் பெருஞ் செருக்கு. இனிப் புறங்கூறி உலகில் ஒருவருக் கொருவர்பகை உண்டாக்கி அன்பினை அழிப்பதில் ஆருக்கு நன்மை யுண்டு. நண்பின் உயர்வை அறிந்தவர் ஒருக்காலும் அவ்வாறு செய்யார்.

> பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
> நட்பாட லேற்றா தவர்.

நண்பரையே தூற்றுவார்களானால் அயலாரை என்ன தான் செய்யார்? இவர்கள் அன்பு நெறியை வளர்ப்பதேது. புறங் கூறாமையை ஒழிக்க ஒரு வழியும் கூறுகின்றார்.

> ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
> தீதுண்டோ மன்னு முயிர்க்கு.

அன்பினை மறந்து எல்லோரும் சினந்து எரியுமாறு பயனில சொல்லுவதேன். அதைவிட வாளா வாய்மூடி இருப்பதே மேலல்லவா?

> பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
> எல்லாரும் எள்ளப் படும்.

யானை கொழுத்தால் தானே தலைமேல் மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும். இனித் தீயொழுக்கம் தீயினும் கொடிது. தீ யொழுக்கத்தால் செல்வராயினார் இல்லை.

> இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
> இலனாகும் மற்றும் பெயர்த்து.

ஆகவே அது இன்பவழியல்ல. முன்னர் நன்றி செய்தார் கொன்றன்ன இன்னா செய்யினும் ஒன்று நன்றுள்ளி அன்பினைப் பெருக்கு என்றார். இங்குமேலே ஒருபடி சென்று நன்றி செய்தார் ஆயினும் செய்யாதவராயினும் தீங்கு செய்யற்க என்கின்றார்.

> அறிவினுள் எல்லாந் தலை என்பதீய
> செறுவார்க்கும் செய்யா விடல்

எல்லாரிடத்தும் அன்புபாராட்ட வேண்டுமானால் தீங்கினைப் பாராட்டலாமா? குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.

இவ்வாறு சிறுகச் சிறுகச் சென்று உலகமுழுதும் சுற்றி வளைத்தார், முன்னே, அறிமுகமாகாதவர் எல்லோர்க்கும் உள்ளூர்க் குளம்போலவும் குலைதள்ளிய நன்மரம் போலவும் நாம் பயன்படல் வேண்டும். மழையைப் பார்த்து ஓர் பாடம் கற்க வேண்டாமா? எங்கே இருந்த புயல் எங்கு வந்து பெய்கின்றது. பெய்யுமிடத்தை அது முன்பின் அறிந்ததா? கடுப்பெடுத்துக் கொண்டு பால் சுரக்கும் பசுவைப்போல வல்லவா மழை பெய்கின்றது. அதுபோல நாமும் எல்லோர்க்கும் உதவவேண்டாமா? அன்பு பாராட்டவேண்டாமா?

> கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
> டென்னாற்றுங் கொல்லோ உலகு.

பசியாற்றுதலின் பெருமையையும் வறியோர்க் குதவுதலின் சிறப்பையும் கூறி அவற்றால் வரும் புகழினைப் புகழ்ந்து முடிக்கின்றார் தமது இல்லற வியலைத் திருவள்ளுவனார்.

டி. பி. மீனாக்ஷிசுந்தரன்.



# தமிழ்ப் பாடம் 18.

## நளவெண்பா

(332-வது பக்கத் தொடர்ச்சி)

### சுயம்வர காண்டம்.

காமநோய் உற்றவர்களுக்கு எல்லாம் விபரீதமாயிருக்கும் சாதாரணமா யிருப்பவர்களுக்குச் சுகம்தருவனவெல்லாம் விரகதாபம் அடைந்தவர்க்குத் துன்பத்தை விளைக்குமென்பது கவிகளின் மரபு. சாயங்காலம் சந்திரிகை தென்றல் மலர்ப்படுக்கை சந்தனப் பூச்சு நறுமணம் கடலின்ஒலி இரவின்அமைதி அன்றிலின்குரல் போன்றவைகளை யாவரும் இனிமையோடு அனுபவிக்கக் கூடியனவாயிருக்கக் காதல் வயப்பட்டுத் தவிப்பவர்கள் இவைகளை வெறுப்பார்கள். குளிர்ந்த வஸ்துக்கள் அவர்களைத் தீயெனச் சுடும். ஆற்றாது புலம்புவார். அவைகளைப் பழிப்பார். காமக்கடவுளாகிய மன்மதன்தான் இவைகளை யேவித் தங்களை வருத்துகின்றானென்று அவனை வைது தூற்றுவார். காமத்தால் வருந்துகின்றவர் படுகின்ற விரகவேதனைகளையும், மாலைக் காலம் இரவு தென்றல் சந்திரன் மன்மதன் அவர்களது வாய்க்கு இலக்காகி வசையுண்பதையும் கவிகள் வர்ணிக்கின்ற பாகங்கள் எந்த நூலிலும் வெகு அழகான பாகங்களாக அமைந்திருக்கும். நளவெண்பா சிறுகாவிய மாதலால் புகழேந்திப் புலவர் இருபது இருபத்தைந்து செய்யுள்களுக்குள் இந்தச் செய்தியை அடக்கி யிருக்கின்றார். அவைகளுள் சிலவற்றை மாத்திரம் நாமிங்கு விளக்குவோம்.

உள்ளமும் நாணும் போய்த் தமயந்தி உயிரும் உரையும் சேர்ந்துகிடக்கச் சூரியன் அத்தமித்த செய்தியை அடுத்த செய்யுள் கூறுகின்றது.

> வையம் பகலிழப்ப வான மொளியிழப்பப்
> பொய்கையு நீள்கழியும் புள்ளிழப்பப்—பையவே
> செவ்வாய வன்றி றுணையிழப்பச் சென்றடைந்தான்
> வெவ்வாய் விரிகதிரோன் வெற்பு. 86.

**பதப்பிரிவு:**—வையம் பகல் இழப்ப வானம் ஒளி இழப்ப பொய்கைஉம் நீள் கழிஉம் புள் இழப்ப பையவே செம் வாய அன்றில் துணை இழப்ப சென்று அடைந்தான் வெம் வாய் விரி கதிரோன் வெற்பு.

**அன்வயம்:**—வெம்வாய் விரிகதிரோன் — வையம் பகல் இழப்ப, வானம் ஒளி யிழப்ப, பொய்கையும் நீள் கழியும் புள் இழப்ப, செம்வாய அன்றில் பையவே துணை இழப்ப—சென்று வெற்பு அடைந்தான்.

#### பதவுரை.

வெம் - வெப்பம்
வாய் - வாய்ந்த
விரி - விரிந்த
கதிரோன் - கிரணங்களையுடைய சூரியன்,
வையம் - பூமி
பகல் - பகல்பொழுதை
இழப்ப - இழக்கவும்,
வானம் - ஆகாயம்
ஒளி - வெளிச்சத்தை
இழப்ப - இழக்கவும்,
பொய்கையும் - தடாகங்களும்
நீள் - நீண்ட
கழியும் - நீர்க்கழிகளும்
புள் - பறவைகளை
இழப்ப - இழக்கவும்,
செம் - சிவந்த
வாய - வாயையுடைய
அன்றில் - அன்றில்பறவைகள்
பையவே - வருந்தும்படி
துணை - தம் இணைகளை
இழப்ப - பிரியவும்,
சென்று - போய்
வெற்பு - மேற்கு மலையை
அடைந்தான் - சேர்ந்தான்.

**விளக்கம்:**—கதிரோன்—இழப்ப—இழப்ப—இழப்ப—இழப்ப—சென்று—வெற்பு—அடைந்தான், என்று முடித்துக்கொள்க.

**விரிவுரை:**—சூரியாஸ்தமன காலத்தில் நிகழ்கின்றனவற்றைக் கவி இங்கே கூறுகின்றார். இழப்ப என்ற வினையெச்சங்கள் இங்கே காரியப்பொருளில் வந்திருக்கின்றன. சூரியன் அஸ்தமித்தல் காரணம்; அதனால் உண்டாகின்ற காரியங்கள் இவை.

அன்றில் பறவைகளுக்குள் ஆண்பெண் பற்று வெகு அதிகம். ஒன்றைவிட்டு ஒன்று பிரியச் சகியாது. அப்படிப் பிரிந்தால் கத்திக்கத்திச் செத்தும் போம். 'செவ்வாய அன்றில் பையவே துணை இழப்ப' என்றது இங்குச், சூரியாஸ்தமனம் ஆவதைக் கவனிக்காமல் தனித்தனி இரை தேடிக்கொண்டிருந்த அன்றில்கள், இருட்டிய பின் சேரமுடியாமல் வருந்துவதைக் குறிக்கின்றது.

அத்தமனகிரியைச் சேர்ந்த சூரியன் மறைந்துபோவதை அடுத்த செய்யுள் கூறுகின்றது.

> மாயிரு ஞாலத் துயிர்காண வானரங்கில்
> பாயிரு ளென்னும் படாம்வாங்கிச்—சேய்நின்
> றறைந்தா ரணம்பாட வாடிப்போய் வெய்யோன்
> மறைந்தான் குடபால் வரை. 87.

இதனிற்கடுத்த செய்யுள் அந்திக்காலத்தை ஒரு தேவதையாக உருவகப்படுத்தி அவள் வருவதை வருணிக்கின்றது.

> மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
> வில்லி கணைதெரிந்து மெய்காப்ப—முல்லையெனும்
> மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
> புன்மாலை யந்திப் பொழுது. 88.

**பதப்பிரிவு:**—மல்லிகையே வெண் சங்கா வண்டு ஊத வான் கருப்பு வில்லி கணை தெரிந்து மெய் காப்ப முல்லை எனும் மென் மாலை தோள் அசைய மெல்ல நடந்ததே புன் மாலை அந்தி பொழுது.

**அன்வயம்:**— புன்மாலை அந்திப் பொழுது—மல்லிகையே வெண் சங்காக, வண்டு ஊத, வான் கருப்பு வில்லி கணை தெரிந்து மெய் காப்ப, முல்லைஎனும் மென் மாலை தோள் அசைய, மெல்ல நடந்தது.

#### பதவுரை.

புன் - அற்பநேரம் இருக்கின்ற
மாலை - மாலைக் காலமாகிய
அந்திப் பொழுது - அந்தியானது,
மல்லிகையே - மல்லிகை மலர்களே
வெண் - வெண்மையான

சங்கா - சங்காகவும்,
வண்டு - வண்டுகள்
ஊத - (அச்சங்குகளை) ஊதவும்,
வான் - சிறந்த
கருப்பு - கரும்பை
வில்லி - வில்லாகவுடைய மன்மதன்
கணை - (மலர்களாகிய) பாணங்களை
தெரிந்து - தெரிந்து
மெய் - அந்தியின் மெய்யை
காப்ப - காத்துக்கொண்டு முன் செல்லவும்,
முல்லைஎனும் - முல்லையாகிய
மென் - மிருதுவான
மாலை - மாலை
தோள் - (தன்) தோளில்
அசைய - அசையவும்,
மெல்ல - மெல்ல
நடந்தது - நடந்துவந்தது.

**விரிவுரை:—** அந்திமாலை வருவதை ஒருதேவதை பவனி வருவதற்கு நிகராகக் கவி கூறுகின்றார். அந்திக் காலத்தில் நிகழ்கின்ற செய்திகள் அந்தப் பவனிக்கு அங்கங்களாக அமைகின்றன. அந்தியிலே மல்லிகையும் முல்லையும் அலரும். உலாவரும் தேவதைக்கு முன்னால் முழங்கும் சங்குகளாக மல்லிகையை வைத்தார்.

மலர்ந்த மல்லிகையின் தேன் அருந்தி வண்டுகள் ரீங்காரம் செய்யுமாகையால் அவ்வண்டுகள் சங்குகளை ஊதுகின்றவர்களுக்கு நிகராயின. பவனி வருபவர்களுக்கு முன்னால் மெய்காப்பாளர் (body - guards) வளைத்த வில்லில் வைத்த அம்பினராய்ச் செல்வார். அந்திக்கு முன்னாலே மன்மதன் வந்து சேரும் தன்மை நோக்கி அம்மன்மதனை அந்திதேவிக்குமெய்க்காப்பாளனாகக் கூறினார். மன்மதனுக்குக் கரும்புவில்லும் மலர்ப் பாணங்களும் உரியன. சாயங்காலத்தில் மலர்கின்ற மற்ற மலர்கள் அவனுடைய அம்புகளாயின. இனி மாலையில் மலர்கின்ற முல்லையைத் தேவியின் தோளிற்குப் பூமாலையாக்கினார்.

குறிப்பு:—இந்தச் செய்யுளில் உருவக அணி அமைந்திருக்கின்றது. அதன் இலக்கணத்தை முன், 70-வது பக்கத்திலும், 129 பக்கத்திலும் காட்டியிருக்கின்றேன். இப்பொழுது ஓர் முறை அப்பாகங்களைப் படித்துக் கொள்ளவும். 'அந்திப்பொழுது நடந்தது' என்பதை விரித்தால் அந்திப் பொழுதாகிய ஒரு தேவதை நடந்தது என்று விரியும். அதாவது வருணனையின் நிமித்தம் மாலைப்போது ஒரு தேவதையாக நாம் கருதும்படி உருவகம் செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வாறே முன் 10-வது செய்யுளில் (70-வது பக்கம்) வசந்தகாலம் வருவதை ஒரு அரசன் வருவதற்கு நிகராக உருவகப்டுபத்தியிருக்கின்றார். அதுவும் இதுபோன்ற உருவக அணி. அதற்குப்பின் 21-வது செய்யுளில் (129-வது பக்கம்) தமயந்தியின் பெண் தன்மையை ஒரு இராச்சியமாகவும் அதனை ஆள்கின்ற அரசியே அவளாகவும் அவளது குணங்கள் புலன்கள் ஆபரணங்கள் அவயவங்கள் முதலியன அவ்வரசாட்சியின் சைநியம் மந்திரி முரசு படைக்கலம் போன்ற அங்கங்களாகவும் உருவகம் செய்திருப்பதைக் கண்டீர். ஒன்றை வேறொன்றாக உருவகப்படுத்தி அவ்வுருவகத்திற்குச் சார்பான அங்கங்களையும் வெவ்வேறாக உருவகப்படுத்தி முழுவதையும் ஒரேகருத்தில் அடக்கி முடித்தால் முற்று உருவக அணி ஆகும் என்று சொன்னேன். அதன்படி இந்தச் செய்யுள் முற்றுருவகவணி ஆவது தெரியவரும். உருவகம்ஒரு செய்யுளில் தனியாகவும் வரலாம்; முற்றியும் வரலாம். முற்றுருவகம் ஆகும்போது அதன் அங்கங்கள் தனித்தனி உருவகங்களாக அமைவது அவசியம். "கைம்மலர் வருந்தத் தேவர் கடல் கடைந்தார்" என்ற இடத்தில் கைம்மலர், அதாவது கைகள் ஆகிய மலர், என்பது தனி உருவகம். (அதனையே மலர்க்கை,—மலர்போன்ற கை—என்று மாற்றினால் உவமையணி ஆய்விடும்). அதே மாதிரி, மல்லிகை சங்காகவும், வண்டுகள் சங்கை ஊதுகின்றவர்களாகவும், இங்கே தனித்தனியாய் உருவகம் செய்யப்பட்டிருக்கின்றன.

அன்னவாறு வந்த அந்தி அற்பநேரம் தங்கித் தமயந்திக்குத் துன்பம் விளைத்ததென்பதை அடுத்த செய்யுள் சொல்கின்றது.

புற்கென்று ரந்தி புனைமலர்க்க ணீரரும்ப
நிற்கின்ற தந்தோ நிலங்காப்பான்—முற்கொண்
டடைகின்ற வேந்தர்க்கு மாண்டஞ்சி னோர்க்கும்
இடைநின்ற காலப்போ லின்று. 89.

இதன்பின் அந்தியும் தேயத் தேயப் பிறைச் சந்திரன் வான்நிலத்திலே தோன்றித் தமயந்தியை வருத்திய அடுத்த செய்யுளில் தெரிகின்றது.

பைந்தொடியா ளாவி பருகுவா னிற்கின்ற
அந்தி முறுவலித்த தாமென்ன—வந்ததால்
மையார்வேற் கண்ணாள் வனமுலைமே லாரழலைப்
பெய்வா னமைந்த பிறை. 90.

பதப்பிரிவு:—பை தொடியாள் ஆவி பருகுவான் நிற்கின்ற அந்தி முறுவலித்தது ஆம் என்ன வந்ததால் மை ஆர் வேல் கண்ணாள் வன முலைமேல் ஆர் அழலை பெய்வான் அமைந்த பிறை.

அன்வயம்:—மை ஆர் வேல் கண்ணாள் வனமுலைமேல் ஆர் அழலை பெய்வான் அமைந்த பிறை—பைந்தொடியாள் ஆவி பருகுவான் நிற்கின்ற அந்தி முறுவலித்ததாம் என்ன—வந்தது.

பதவுரை.

மை - மையானது
ஆர் - பொருந்திய
வேல் - வேலைப்போன்ற
கண்ணாள் - கண்களையுடைய தமயந்தியின்
வன - அழகிய
முலைமேல் - முலைகளின் மேல்
ஆர் - நிறைந்த
அழலை - நெருப்பை
பெய்வான் - சொரிவதற்கு
அமைந்த - ஏற்பட்ட
பிறை - பிறைச் சந்திரன்,
பை - பசுமையான பொன்னால் செய்த
தொடியாள் - வளையல்களை அணிந்த தமயந்தியின்
ஆவி - உயிரை
பருகுவான் - குடிப்பதற்கு
நிற்கின்ற - காத்துக்கொண்டிருக்கின்ற
அந்தி - அந்தி என்னும் பேய்
முறுவலித்தது - சிரித்தது
ஆம் என்ன - என்று சொல்லும்படி,
வந்தது - தோன்றியது.

**கருத்து:—** தமயந்தியின் உயிரைக் குடிக்கக் காத்துக்கொண்டிருந்த அந்தியென்னும் அரக்கி, சமயம் வாய்த்ததென்னும் சந்தோஷத்தினால் சிரிக்குமானால் எப்படி அவள் கோணற்பல் தெரியுமோ அப்படிப் பிறைச் சந்திரன் அந்தியில் தோன்றியது.



விரிவுரை:—88 - வது செய்யுளில் அந்தியை ஒரு தேவதையாகக் கூறிய கவி இங்கு அதனையே ஒரு அரக்கியாக உருவகஞ் செய்கின்றார். அந்த அரக்கி தமயந்தியினுடைய உயிரைக் குடிக்க வெகுகாலமாகக் காத்திருந்ததாகவும், இப்பொழுது சமயம் வாய்த்தென்ற சந்தோஷத்தால் சிரித்ததாகவும், அப்படிச் சிரிக்கும்போது தோன்றிய கொடும் பல்தான் பிறைச் சந்தின் என்றும் இங்குக் காட்டுகின்றார். அரக்கியின் பல்லைப் போல் தோன்றிய பிறையும் அவள்மீது, நிலவையல்ல, நெருப்பையே சொரியப் போகின்றது.

அந்தி இவ்விதம் அரக்கியாவதும் சந்திரன் நெருப்பைப் பொழிவதும் எல்லாருக்குமல்ல. தமயந்திக்கும் அவள்போன்ற நிலையில் இருக்கின்ற மற்றவர்களுக்கும் மாத்திரமே

காதலுற்ற சீதைக்கு இவ்விதமே அந்திப்போது, எமனாகவும் பேயாகவும் பாம்பாகவும் இன்னும் கொடியன பிறவாகவும் தோன்றுகின்றதை இராமாயணம், பால காண்டம், மிதிலைக் காட்சிப்படலம் 62-வது செய்யுள் முதல் 67-வது செய்யுள் வரையில் காணலாம். மாணவர் அப்பாகத்தை எடுத்து உரையின் உதவியால் படித்துத் தெரிந்துகொள்ளத் தாமாகவே முயல்வது நலம்.

குறிப்பு:—பருகுவான்-பருக, பெய்வான் - பெய்ய, இவை வான் என்ற முடிவுபெற்ற வினையெச்சங்கள்.

## கம்ப ராமாயணம்

### பால காண்டம்

### 4. அரசியற் படலம்.

[336-ம் பக்கத் தொடர்ச்சி]

**கம்பரே யயர்ந்தனர் தயரதன் பெருமையை**

தாயாய் நின்று தருமமும் தவமாய் நின்று அர்த்தமும், இவைகளுக்கிடையே சேயாய் நின்று பாகதி வினைவையும் பயக்குவிக்கும் தயாதன், மாந்தர்தம் காமத்திற்கும் காரணனுயமைகின்ற பரிசு கம்பரின் வாய்நின்று வெகு நயமாய் வருகின்றது. தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் (அல்லது, அறம் பொருள் இன்பம் வீடு) என்பதே தொன்றுதொட்டு வருகின்ற பிறவிப் பேறுகளின் முறையாயிருக்கக் கம்பர் அதனை மாற்றி, அறம் பொருள் வீடு இன்பம் என இச்செய்யுளில் அமைத்துச் சொல்கின்றனர். ஏனெனில், வீட்டுப்பேறு அக்கால மாந்தருக்குக் கடைமுறைக் கருத்தல்ல போலும். துய்க்கின்ற இன்பம் அளவற்றதேனும் அவர் கருத்திற் கடையாயிருந்தது இன்பமே. தயாதன், 'நோயொக்கு மென்னின் மருந் தொக்கும்' என்றது இவ்வின்பத்தைக் குறிப்பா யுரைக்கவந்த சொற்களாம்.

அறம் பொருள் இன்பம் வீடு என்பனவற்றின் தன்மைகளையும், அப்பேறுகளையும், அவைகளை மாந்தர் தயாதனால் எய்திய விதமும் விளக்குகின்ற இச்செய்யுள் ஔவையாரின் கூற்றைத் தன்னுள் தழுவிக் கொண்டுளதென முன்னரே கூறினோம். அதனில் அவ்வறிவுடையம்மையார், 'காதல் மனையாளும் காதலனும் தீதின்றிப் பட்டதே யின்பம்' என வகுத்துளர். அதற்கிணங்க யாவருக்கும் இன்ப முறுவிக்கின்ற தன்மையில் தயரதனை அவ்வவர் மனைவியர்க்கு நிகரெனக் கூற வேண்டிய தின்றியமையா தாகின்றது. மேலும், ஒருவனுக்கு உற்ற உறவினர் மூவர். அவர்தாம், முன்னமைந்த அன்னையும், பின்வரும் பிள்ளையும், தன்னருந் தாரமும் ஆவரென்றெடுத் தோதுதல் மிகை. அவர் தமுன் தருமத்திற்குத் தாயும், பின்செல்லுங் கதிக்குச் சேயும் வந்தவாறே இன்பத்திற் கில்லாள் வருவது பொருந்தும். எனினும் தயாதனை யாவருக்குந் தாரமென்று வெள்ளைச் சொற்களால் கூறுவது சிறிதளவு தகவின்றி நயங்குறைந்த கூற்றாகத் தோன்றலாம். ஆதலின் கம்பரும் அச்செய்தியை மறைபொருளாக விடுகதையொன்று வகுப்பதுபோல் உணர்த்தினார். யாவர்க்கும் அத்தயாதன் 'நோயொக்கும் என்னின் மருந்தொக்கும்' என்ற வாற்றால் இவ்விடுகதை புனையப்பட்டிருக்கின்றது. இப்புதிரிற்கு விடை திருக்குறளுள் தேடத் தென்படும்.

முதனா ளியற்கைப்புணர்ச்சி யெய்திய தலைமகன் பிரிந்தபின் காம நோயுற்று வருந்திக் கிடக்க மறுநாள் இடந்தலைப்பட்டு அத்தலைவியால் தன் நோய் தீர்ந்து,

"பிணிக்கு மருந்து பிறம னணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து."

[நோயொன்றாயின் அதற்கு மருந்து வேறு. இப்பெண்ணோ தன்னால் விளைவித்த நோய்க்குத் தானே மருந்துமா யிருக்கின்றாள்.]

எனச் சொல்லித் தன்னுள் உவப்பதாக நாயனார் காமத்துப்பாலுள் புணர்ச்சிமகிழ்தல் என்னும் அதிகாரத்தில் எடுத்துக் காட்டுகின்றார். ஆதலின், காமநோய் விளைப்பதும் விளைத்த நோயைத் தணிப்பதும் ஆகிய இருதன்மையையும் தன்னிடத்திலேயே வைத்தவள் தலைவி. மற்ற நோய்களுக்கெல்லாம் அந்நோய்க்கு வேறாய பிறிதொன்று மருந்தாயமையும். "தன்னோய்க்குத் தானே மருந்தாயிருக்கும் புதனம்எதன்பால் அமைந்துளது," என வினவினால் குறளின் உதவியால் கூறத்தக்க விடையும் 'தலைவி' என்பது ஒன்றே. இவ்விடையைக், கற்போர் குறிப்பால் உணர்ந்துகொள்வரெனும் நம்பிக்கையால் கம்பர் "நோயொக்கு மெனின் மருந் தொக்கும்" எனத் தயாதன் எவ்வெவர் இன்பத்திற்கும் ஆதாரமாய தன்மையை, "காதல் மனையாளும் காதலனும் தீதின்றிப் பட்டதே இன்பம்' என ஔவை வகுத்ததற்கும், உற்ற உறவினரையொக்கத் தம்மரசன் நிகழுமாறு தான் கொண்ட கருத்திற்கும் பொருந்தும்வகை இச் செய்யுளில் இழைத்து வைத்தனர்.

இவ்வடிக்கு இப்பொரு ளொன்றே இயற்கையாயமையும். அதுவன்றி, 'நோயொக்கு மென்னின் மருந் தொக்கும்' என்பதற்கு, 'நோயைப்போல் தீயரைத் தயாதன் நலிவானாயினும் நல்லவரை மருந்துபோல் அளிப்பான்,' என்றேனும் இதுபோன்ற பிறவகையிலேனும் வலிந்து பொருள்கொள்ளல் நேர்மையாகாது, நயமுமில்லை. 'எவர்க்கு மன்னன்' என்பது இச்செய்யுளில் கடைநிலைத்தீவகமாக நிற்கின்ற தாதலால், சிலரை நலிந்தானென்றும் சிலரை அளித்தானென்றும் பிரித்தற்கு இலக்கணம் இடந்தராது. அல்லாமலும், வருத்துதல் என்னுமோர் இழிந்த செய்தியைக் கம்பர் தயாத

னோடு சேர்த்துச் சொல்லவும் இசையார். 'வேண்டில் இன்அமிர்தும் நஞ்சு'மாகும் தன்மை சச்சந்தன் அனைய பொதுமையாய அரசர்களுக்கு ஏற்றதா யிருக்குமே யன்றித் தயரதன் போன்ற தனிப்பெரும் வேந்தருக்குப் ஏற்புடைத்தாகுமென எண்ணல் நேரிதன்று

இன்னவிதம் பிறவிப்பேறு நான்கினையும் நல்கி வைக்கும் தயரதன், இந்நான்கினின் மெய்ம் மையை மாந்தர் ஆராய்வதற்கு இன்றியமையாத அவ்வவர் அறிவேபோல் உடனின்று உதவினான் என்னுமாற்றால் இச்செய்யுள் முடிகின்றது. வேந்தனினி மற்றவர்க் காற்றுதற் குளது வேறு என் !

தாயாயும் தவமாயும் சேயாயும் காதலர்தாமாயும் அவ்வவர் அறிவுமே யாயும் தயரதன் பிறர்க்கு அமைந்தவாறு இவ்வாறாயின் அவன், தனக்கே உரியன யாது செய்து கொண்டனன் என்பதை அடுத்த பாசுரத்தில் காண்கின்றோம்.

ஈய்ந்தே கடந்தா னிரப்போர்கட லெண்ணினுண்ணூல்
ஆய்ந்தே கடந்தா னறிவென்னு மளக்கர்வாளால்
காய்ந்தே கடந்தான் பகைவேலை கருத்துமுற்றத்
தோய்ந்தே கடந்தான் றிருவிற்றொடர் போகபௌவம்.

[யாசகர் கடலை அவன் கொடுத்தே கடந்தான். அறிவெனும் கடலை அவன் ஆராய்ச்சிசெய்தே கரைகண்டான். பகைவர் சமுத்திரத்தைத் தன் வாளினால் வெருவச்செய்தே ஓட்டினான். செல்வத்தினால் விளையும் சுகம் என்னும் சாகரத்தைக் கருத்து முழுவதுங்கூடி ஆழ அனுபவித்தே தீர்த்தான்.]

மற்றவெல்லாம் வாய்மையே. கடையிற் சொன்ன செய்திதான் கம்பர் தெரியாமற் கூறிவிட்டார். இகத்திற்குரிய இன்பங்களில் தயரதன் கருத்து முற்றத் தோய்ந்திலன். அவன் அவ்வாறு மனமார அனுபவித்ததாகக் கம்பரின் கண்ணிற்குத் தோன்றியதைத் தோன்றியபடி எழுதினாரேயன்றி அவன் மனநிலையின் மெய்ம்மையைச் சோதித்து இங்குச் செப்பினாரில்லை. ஏனெனில் பின்னோரிடத்தில் தயரதனே தான் இவ்வுலக இன்பங்களை எவ்வாறு கருதி அனுபவித்தனன் என்பதைச் சொல்ல நேர்கின்றது. அவ்விடத்தைப் பார்ப்போம்.

இதுகாறும் மன்னுயிர்க்கு உறுவதே செய்துவைகிய தயரதன் இனித் தன்னுயிர்க்கு உறுவதும் செய்ய எண்ணினவனாய், இராமனுக்குக் கோசலத்தின் மௌலி சூட்டித் தான் அரசின் நீங்க நினைத்ததை மந்திரி முதலாயினோரொடு உசாவுகின்ற அமயத்தில், செல்வமும் அதனால் வரும் இன்பங்களையும் தான் ஒவ்வொரு நாளும் முதல்நாள் எச்சிலாக மதித்து நுகர்ந்தானே யல்லாது அன்றன்று வாய்த்த பெரும் பேறெனும் ஆர்வத்தோடு அனுபவித்ததில்லை என்றே,

கச்சையங் கடகரிக் கழுத்தின் கண்ணுற
பிச்சமுங் கவிகையும் பெய்யு மின்னிழல்
நிச்சய மன்றெனி னெடிது நாளுண்ட
எச்சிலை நுகருவ தின்ப மாகுமோ.

[அங்குசம் பாய்ந்த புண் காய்ந்துகாய்ந்து தழும்பேறிய மதயானையின் கழுத்தில், மயில்தழை விசிரியும் குடையும் அளிக்கின்ற இனிய நிழலகத்து அமர்வது நிச்சயமல்லவே. ஆதலால் அனேக நாட்கள் உண்டு கழித்த எச்சிலை மீண்டும் அருந்துவது இன்பம்ஆகுமோ?]

என எதிர்மறையாய் வினவுகின்றான். இன்னவாறு இவை நிச்சயமற்ற எச்சிலாய் நிற்பது மல்லாது, பிறவியெனும் பெருங்கடலை நீந்துதற்குத் துறவன்றித் துணைசெய் தெப்பமும் வேறில்லையாதலால் அந்நெறியே தனக்கினித் தகுமென்றுஞ் சாற்றுவான். இவ்வுரைகேட்கும் அவன் மந்திரக் கிழவரும் மற்றுளோரும் கம்பரைப் போலவே, "கருத்து முற்றத் தோய்ந்திவன் போகங்கள் யாவும் நுகர்ந்த நாளெல்லாம் நுகர்ந்தனனாயினான்" என மதித்தனராயின் தம் மனதிற்குள், "முதுமை எய்தவே இனித்துய்க்க வகையிலா இன்பத்தைத் தூற்றுகின்றனன் போலும்" என வொருவேளை பரிகசித்தலுங் கூடு மெனவஞ்சியோ, புலன்நுகர் போகமென்ற யாவையும் அவன் துன்பமாயன்றிப் பிறவழி பாவித்ததில்லை என்பதைக் கீழ்வருஞ் சொற்களால் விளம்பலுற்றான்.

இனியது போலுமிவ் வரசை யெண்ணுமோ
துனிவரு நலனெனத் தொடர்ந்து தோற்கலா
நனிவரும் பெரும்பகை நவையி னீங்கியத்
தனியர சாட்சியிற் றாழு முள்ளமே.

[ஊடலால் வருவதற்கிருக்கும் இன்பம் எனப் பின்பற்றி, மிகுதியாய் வருவதேனும் தோற்கப் படாததாய பெரும் புலன்களென்னும் பகைவர் செய்யும் குற்றத்தினின்று நீங்கி (ஊடலால் வரும் இன்பமென்ற தன்மையிலமைந்த) அந்த ஒப்பற்ற சாம்பிராஜ்யத்தையே நாடும் எனது மனமானது, இந்த அரசை ஒரு இனிய பொருளாக எந்நாளும் எண்ணியிருந் திருக்குமோ]

வாய்மையின் உருவம் போன்ற தயரதனைய வேந்தர் தம் முரைக்குத் தாமே கரி. "இவ்வுலக இன்பங்களில் நான் ஆழ்ந்தவன்போல் காணினும் என் மனமானது எப்பொழுதும் பரமபத நினைவிலேயே தாழ்ந்து இருந்தது" என்று அவன் சொல்வது மனச்சாக்ஷிக்கு விரோதமாய வெற்றுரையென்று எண்ணற்பாலதன்று. முன்னின்று ஒரு செல்கதியிலேயே அவன் மனம் அவனைச் சிறிது மகலாது உய்த்துக் கொண்டிருந்தது. இதனை அறிந்திலர் கம்பர். "கருத்து முற்றத் தோய்ந்தே கடந்தான் திருவில் தரு போக பௌவம்" என்றோர் அபவாதத்தை அவர் கருதியவாறு தயரதன் மீது ஏற்றிவிட்டார். அவனோ, "என் மனம் இனியது போலும் இவ்வரசை எண்ணுமோ" என இகழ்கின்றான். இவ்விரண்டினில் தயரதன் தன்னைப் பற்றித் தானே சொல்வதையே மெய்யென்று ஏற்றுக் கொள்வது முறையாகும். இதனை அறியாத குற்றமும் கம்பருடையதன்று. உத்தம தரத்துக் கவிகள் தாம் சிருஷ்டி செய்யும் பாத்திரங்களுள் இன்னார்க்கு இன்ன குணம் எனப் பொதுவகையில் அவர்க்கமைத்துப் பிறப்பித்தலோடும் அக்கவிகளின் செயல் முடிந்துவிடுகின்றது. பிறகு அப்பாத்திரங்கள் கதையூடு கலந்து விவகரிக்கின்ற காலத்தில் தம்மைஆக்கியோன் முதலில் குறித்த தன்மையையும் விஞ்சித் தாமே சிறப்பாய சிலகுணங்கள் எய்தி வளர்கின்றனர். இவ்வருமை ஆங்கில இலக்கியத்தில் ஷேக்ஸ்பியரின் நாடகங்களிற் காண்கின்றோம். இங்குத் தமிழில் கம்பரிடத்தும் பல இடங்களில் காண இயலும். கடவுளும் முதல்தரக் கவிகளும் ஒருதிறத்தவர். இருவரும் சிருஷ்டிக்கின்றனர். தாம் சிருஷ்டித்த ஜனங்களுக்குப் பொதுவாய சில தன்மைகளையும் நிகழ்ச்சிகளையும் விதித்து அனுப்புகின்றனர். இருவரும் கற்பித்த அச்சனங்களுக்கு உயிரும் வளர்ச்சியும் உளவாதலால் ஆக்கியோன் விதித்த விதிக்குள்ளடங்கிச் செய்கை ஒழுக்கங்களைத் தொடரினும் தம்மைப் படைத்தோனை எதிர்பாராமலே அக்கதைவரு ஜனங்களின் மனம் விவகரிக்கும். முன்னைவினை ஒருபுறமிருக்க அவரவர் மனமே அவரவர் நிகழ்கால எதிர்கால நிலைகளுக்கு ஆதாரமாகின்றது. இது கரும யோகத்தின் தத்துவம். மனத்திற்குரிய இச்சுதந்தரம் ஈசுவரன் படைத்த நமக்கும் கவிகள் படைத்த பாத்திரங்களுக்கும் ஒருங்கேயுளது. அவ்வுரிமையைக் கையாண்ட தயரதன் கம்பரின் கருத்



தும் பின்னிட விஞ்சிச் சிறப்பெய்தினான். இதனால் கவியின்பால் குறைதோன்றாது. கற்பித்த பாத்திரங்கள் கர்த்தாவின் கைகடந்து விவகரிப்பதே கவித்திறம். இன்னபடி இவன் ஆகவேண்டுமென்று முயன்ற தந்தையின் ஆர்வத்தினும் அதிகமாய பெருமையை மைந்தன் எய்தினான் என்றால் அத்தந்தை மகிழ்வனே யல்லாது மனமாழ்கான், ஏதமும் படான். அவ்வாறே, கம்பரின் மானஸ புத்திரனாகிய தயரதன் இங்கிவர் தன்னைப்பற்றிச் சொன்னதை நூலினுள்ளாறாயிர அடிகள் நடந்தபின் மறுத்துரைத்த மாண்பினைப் பாராட்டுவோர்தம் முன் அக்கம்பரே முதல்வராவர்.

தன்னைப் பற்றிக் கம்பர் கொண்டிருந்த அபிப்பிராயத்தைத் தயரதன் இவ்வாறு மறுத்தது மாத்திரமேயல்லாது அவனுரையில் பின்னுமோர் நயமுளது. "இன்றைக்கு நீ வெறுக்கும் இன்பத்தை ஏன் இதுகாறும் அனுபவித்து வந்தாய்" எனப் பிறர் கேளாரேனும் அவ்வாறு எண்ணுவரோ எனும் சங்கையால் தயரதன் தான் அரசவின்பமும் துன்பமாய் நினைத்தே எந்நாளும் வாழ்ந்தனன் என்பதைக் கூற முற்பட்டான். இதனின்று இன்னொரு கேள்வி தோன்ற இடமுளது "துன்பமாய் நினைத்தாயாயின் மற்றதனைத் தொடர்ந்ததேன், முன்னரே விட்டகன்றிருந்தால் அமையாதோ!" வெனச் சிலர் எண்ணலாம். அன்னதற்கும் 'துனிவரும் நலன் எனத் தொடர்ந்தேன்' என அமைதி காட்டும் செவ்வி மிகவும் அருமையாயது. துனி என்பதற்கு ஊடல் எனும் பொருள் உளது. ஊடலால் வரும் இன்பம் என நினைத்து இவ்வரச வைபவத்தை ஆதரித்தவன் சூழ்ச்சி சாதாரணமன்று. தலைவியோடு பயில்கின்ற ஒருவனை அவள் ஊடலால் 'என்னை அண்டேல்' என விலக்கி விடுவாளாயின் அவன் அளவிறந்த துன்பம் உறுகின்றான். உற்றபோதிலும் அவன் 'இம்மாதர் செய்தியே இவ்விதம் துன்பத்திற் கிடமாய தன்மையது, ஆதலால் அவர்களை அறவே துறந்து விடுவோம்' என எண்ணமாட்டான். புலவியளவு அது துன்பத்தை விளைக்கினும் பின் கூடுகின்ற இன்பத்தை எதிர்பார்த்து நிற்பானுதலின் பிணக்கின் வருத்தத்தையும் ஒருவாறு பேணுவான். காமத்தின் திறமறிந்த வள்ளுவனார்,

ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்

[காமத்திற்கு இன்பம் ஊடல். அவ்வூடலுக்கு இன்பம் பின் கூடுதல்.]

எனத் தந்நூலின் கடைக்குறளில் ஓதுகின்றார். சிற்றின்பத்திற்கும் பேரின்பத்திற்கும் இடைகிடக்கும் மாறுபாடு வெகு சிறிது. பின்வரும் இன்பத்தைக்கருதி ஊடலெனும் துன்பத்தையும் எவ்வாறு மாந்தர் உவக்கின்றார்களோ, அவ்வாறே இனிஎய்தும் பேரின்பத்தைக் கருதித் தயரதன் அப்பேரின்பத்தினின்று தன்னைப் பிரித்து வருத்துகின்ற அரச போகங்களின் துன்பத்தையும் துறக்காமல் தாங்கினானாயினான். ஆனால் இக்குறளிற்குப் பரிமேலழகர் உரை கூறும்வண்ணம் அவ்வூடலையும் அளவறிந்து நீக்கவேண்டும். ஆதலால் தயரதன் துன்பமேயென்று மதித்தானேனும் அரசினைஇதுகாறும் அநுபவித்ததும், இனித் துறந்துவிடுவதும் தக்கவாயின. மறுமை யெய்துதற்கு இம்மையும் ஓரளவு கருவியாதலைத் தயரதன் மறந்திலன். 'துனிவரும் நலன்' என்னும் இத்தொடர்க்குப் பொருள் முன்னிங்குக் கூறிய தொன்றே நயமுடைத்து. மற்று அப்பொருளே கவியின் கருத்துமாயிருத்தல் வேண்டுமென்பதற்கு இந்நூலினகத்தே இரண்டொரு சான்றுகள் இருக்கின்றன. "துனிவரு நலத்தொடு சோர்கின்றான்" (உண்டாட்டுப் படலம் 50-வது செய்யுள்) என்றும், "ஊடிக்காணக் காட்டும் நலத்தாள் (பூக்கொய் படலம் 26-வது செய்யுள்) என்றும் வருமிடங்களில் காணும் பொருள் இதுவே.

பின்வரும் இன்பத்தை இலக்காகவைத்துப் பொறுத்திருக்க வேண்டிய துன்பமாம் தன்மையில் ஊடலும் இவ்வுலக வாழ்க்கையும் ஒன்றேயாயின போதிலும் அவை தம்முள் முக்கியமாய பேதமும் ஒன்று உளது. அப்பேதத்தையும் உணர்ந்திருந்தான் தயரதன். இல்லையெனில் தீராத் தீமையாய் முடியும். ஊடலால் இன்பம் பெறுதற் கொத்தவர் அதற்குத் தோற்றல் வேண்டும். இத்துன்பம் இனிச் சகியேன் எனத் தலைசாய்ந்து போனவரே இன்பத்தை எய்துவது ஊடலின் செய்தியென்பதைத் திருவள்ளுவர்,

ஊடலிற் றோற்றவர் வென்றா ரதுமன்னுங்
கூடலிற் காணப் படும்.

[ஊடலிலே தோற்றவர்தாம் உண்மையில் வெற்றி பெற்றவர் எனக் கருதப்படல் வேண்டும். அதனுண்மையைக் கூடுகின்ற காலத்தில் காணலாம்]

எனக் குறளுள் சாதிக்கின்றனர். பிறவியெனும் துன்பத்திற்கோ தோற்கப்படாது. இனி இதைச் சகிக்கமாட்டே னென்றொருவன் அத்துன்பத்துள் ஆழச்சாய்ந்து உடைந்துபோவானாயின் அவனுக்குப் பின் மறுமை யில்லை.

இவ்வேறுபாட்டினை உட்கொண்டிருந்ததால் தயரதன், "துனிவரும் நலன் எனத் தொடர்ந்து" எனச் சொல்லி வருகையில், 'தோற்கலா நனிவரும் பெரும் பகை நவையின் நீங்கி' என்று விரைவாகச் சேர்த்துக் கொள்கின்றான் என்பதற் கையமில்லை. தோற்க வேண்டிய துனி காமத்துள் தோன்றுவது. தோற்கப்படாத துனி இம்மைத்துன்பங்கள். இம்மையை வென்ற வீரன் யாவனெனின் அதன் துன்பத்திற் குடைந்து தலை சாய்த்தவன் அல்லன், தலைகொடுத்துத் தாங்கினவனே யாவன்.

இத்துணை நுண்மையாய தத்துவமறிந்த வித்தகன் தயரதப் பெருமன்னன். அன்னவனைப் பாவம் நம்கவி, "கருத்துமுற்றத் தோய்ந்தே கடந்தான், திருவிற்றரு போக பௌவம்!' என எளிதில் கூறிவிட்டார்.

T. N. சேஷாசலம்.

# அடி முதற் படி.

[மார்ச்சு மாதத்துத் திருவேணிப் பத்திரிகையில் ஸ்ரீமான். K.S. வெங்கடரமணி என்பவர் எழுதிய கட்டுரையின் மொழி பெயர்ப்பு]

புதிய புதிய பாதைகளைத் தொடர்தற் கேற்ற துணிவும் ஊக்கமும் வாய்த்ததாலல்வோ சிருஷ்டி சித்திரத்தில் நாம் முதற்சிறப் புடையவராய் இருப்பது. எனினும் இந்தத் தைரியம் தோன்றுவது வெகுசிலர் மாட்டே. அல்லாது, அதனைப் பூர்த்தியாய் உபயோகப்படுத்திக் கொள்வதற் கேற்ற அமயம் கடந்த பின்னரே கையாள்வது மாகின்றனர். எனின், விளையும் பயன் மிக்க அற்பமேயாதல் வியப்பன்று. நமது முன்னேற்றம் வெகு தாமதமாய் இருந்து வருகின்றது. உள்ளத்தின் உண்மையான முதிர்ச்சி நந்து ஊறும் நடையினும் மந்தமேயாவது பரிதாபமே. இன்னபடி, உய்ரூட்டும் சக்தி படுபாழாகிப் போவதன் காரணம், உலகடங்கலும் (அதனினும் இக்கால இந்திய நாட்டின்கண்) இளைஞர்தாம் பெறுகின்ற கண்ணிலாக் கொடியதோர் பயிற்சி முறையே யாகும்.

நமது நன்னல மனைத்திற்கும் சிறுவர்பெறும் கல்வியே உயிர்நிலையாய்நிற்கின்றதென்பது யாவருக்குமொருதலை. அகன்ற வகையில் அக்கல்வியை அளிக்க வேண்டுமென்றவொரு கொள்கையையும் அவரவர் உள்ளுணர்ச்சி தூண்டுவதால் யாவரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆயினும் ஆடு போகும்வழி ஆடுபோலப் பண்டைநாள் நம்நாட்டு வாழ்க்கையில் பயின்ற பழக்கத்தை விடுவதற்கு அஞ்சியே விவகரிக்கின்றோ மாதலின் புராதன பழக்க வழக்கங்கள் நம்மைப் பற்றிய பிடிநெகிழாமல் நிலைநிற்கின்றன. நிற்கவே, செய்கின்ற பிரயத்தனம் பெரியதேயாயினும் அதற்கேற்றபடி தலைமுறைக்குத் தலைமுறை விருத்தியொன்றும் நாம் உண்மையில் எய்தக் காண்கிலம். இரண்டடி அப்பால் எடுத்து வைத்தால், திப்பியத் தன்மை வாய்ந்த ஜீவநதி பெருமையோடு புரண்டோடிக் கொண்டிருந்த போதிலும், அதனை எய்தாது, நீர்க்கரை சேர்வதற்குப் பன்னாள் நடந்து தேய்ந்த பாட்டையையே மீண்டும் மீண்டும் தொடர்ந்துசென்று அதே குட்டையினளவோடு நின்று குடித்து வருகின்றோம்.

எல்லாவற்றையும் ஒரேவித திட்டத்திற்குள் அடுக்கி விடுகின்றோம் ஆதலின், அவரவர்க்குரிய ஒருதனித் தன்மையும், வேற்றுமை நயத்தால் விளங்குகின்ற அழகும் நசித்துப்போகின்றன. என்ன பயன் சாதித்தோம் என்பதைக் கூட்டியெண்ணிக் கணக்கின் மிகுதியால் மதிக்கின்றார்களே யல்லாது குணத்தின் தரம்பார்த்துத் தூக்குவார் இங்கில்லை. சர்வகலாசாலைகள், கும்பல் கும்பலாய்ச் செய்து குவிப்பதே தம் கருமம் எனக்கொண்டிருக்கின்றன. ஆகையால், மானுடஇயற்கை மாறிவிடுதற்கொத்த இரஸவாத வித்தை ஒருவருக்கும் புலப்படாது இன்னமும் கழிகின்றது. தந்தைக்குப் பிள்ளை பிள்ளைக்குப் பேரன் என மனிதருக்குள் மிருகத்தனம் ஒடுங்கித் தெய்வ அம்சங்கள் உயர்வதற்குரிய சீர்திருத்த முறையொன்றும் அவனது அமைப்பினூடே நிகழ்கின்றதில்லை. அதே காமம், அதே குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம், அதே ஆட்சியினசை, கைக்கெட்டியதைக் கவர்ந்துகொள்ள வேண்டுமெனும் நோக்கம், இவைகளே பின்னும் பின்னும், உரத்தகுரலிலும் வலுத்த செயலிலும் பாழ்படு பான்மையில் தோன்றி நிகழ்கின்றன. நாமடைந்த விருத்தியெல்லாம் செயல்வகைக் கருவிகளைச் செப்பனிட் டிருப்பதன்றி, நமது நோக்கமும் கருத்தும் எக்காலத்திலு மிருந்ததைப் போலவே தாழ்ந்த நிலையிற் கிடக்கின்றனவே. முன்னொன்று நிகழ்ந்தது பின்னும்பின்னும் நிகழும் என்னும் அவ்வலிய விதிதான் மன்பதைத் தொகுதிதன்னைக் கொலை கொண்டு பற்றியிருக்கின்றது போலும்.

முறைகள் யாவும் அடியோடு மாறினாலன்றி நாம் உய்ய மாட்டோம். இளைஞர்தம் மனம் எதேச்சையா யிருக்கட்டும். சுயமாயியங்கும் சந்தோஷத்தை அவர்களது சக்தி அடையுமாறு செய்து வையுங்கள். நேற்றைப்பற்றி நினையாமல் இன்றைக்கும் நாளைக்கும் ஏற்றபடி சிறிது நம் பார்வையைச் செலுத்துவோம்.

இறந்தகன்ற காலத்தின் கால்வழியே கதியென நம்பிப் பண்டைநாள் பாரைகளில் நாம், கண்ணும் அசைவு மற்ற அட்டைகளைப் போல் இப்பொழுது ஒட்டிக்கொண் டிருக்கின்றோம். சண்டையும் தேதியும் போன்ற உயிரற்ற பாகங்களையே சரித்திரங்களில் பயில்கின்றோமே யல்லாது, பின்வரும் நம்நாட்கள் செல்வமும் சிறப்புமடையுமாறு அச்சரித்திரங்களின் மெய்ப்பாட்டுணர்ச்சியையோ நாம் எடுத்தளிப்பதில்லை. பண்டைக் காலமென்னும் ஒரு கனப்பூதத்தின் எலும்புகள் சிதறிக் கிடக்கின்ற பாலைப்பெரு மணல்வெளியில் நமது பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் கட்டப்பட்டிருக்கின்றன. இதனின்று தம் ஆகாரத்தை உறிஞ்சும்படி நமது சிறுவர்களுக்கு உல்லாசமாய்ச் சொல்லிவிடுகின்றோம். மரத்துகள் இதனினும் அன்போடளித்த உணவு ஆகாதோ!

சிறுவர்க்கியன்ற பள்ளிக்கூடங்களிலும் வாலிபர் கற்கும் கலாசாலைகளிலும் இப்பொழுது வழங்கிவருகின்ற பாடமுறைகள் யாவையும் அடியோடு மாற்றுவதொன்றே நம்மானுட இனத்தை, அதனுள் நின்று இயக்குகின்ற தீர்க்க தரிசனத்திற்கும் அதன் தேவதாம்சத்திற்கும் ஏற்றவொரு பெருமையைப் பின்னாள் எய்துவதற்கியன்ற மார்க்கத்தில் வழிகாட்டிச் செலுத்தாநிற்கும்.

ஆன்மாவைப் பொசிக்கியழிக்கும் தனதாய (Economics) சாஸ்திரத்தை விடப் பயிர்த்தொழில் சாஸ்திரம் நமது நல்வாழ்விற்கு மிகவும் முக்கியமானது. பூகோள சாஸ்திரமும் வானசாஸ்திரமும் சரித்திரத்தைவிட முக்கியமானவை. ஜீவசாஸ்திரம் (Biology,) ஜனசங்க சாஸ்திரம் (Sociology,) பிரஜாபிவிருத்தி சாஸ்திரம் (Eugenics) போன்ற சாஸ்திரங்களின் அறிவினால் நமக்கு விளையும் பயன் கணிதசாஸ்திரத்தால் விளையாது. தத்துவசாஸ்திரங்களும் காவியங்களும் இன்றியமையாதனவே யன்றி எழுத்தாராய்ச்சியும் பாஷைகளின் வம்சமும் நமக்கென்ன பயன் தரும். சூத்திரங்களுக்கும் விதிகளுக்கும் புத்தகங்களுக்கும் சுண்ணாம்புக்கட்டிக்கும் எழுது பலகைக்கும் பண்டிதமுறையில் பரிதாபகரமாய்ப் பட்டுழலுமொரு பெருமோகம் விட்டகன்று, மொழி பெயர்ப்பு விரித்தியுரைப் புத்தகங்களன்றி, ஆசிரியன் மாணாக்கன் இருவரையும் ஒருபடியினுள்ளமைக்கும் பெருவாழ்வின்பால் இளைஞர்தம் மனதினில் அன்பும் ஆராய்ச்சியும் அறிவும் மந்திரச் சொல்லொன்றால் புகட்டுவதால் நுண்ணியதாய்ப் பரவியெழும் பேருவகைக்கு இடந்தரல் வேண்டும். புத்தகத்தைக் குறைத்துப் புத்துயிரைப் பெறுதற்கு யாவரும் எங்கும் மன்றாட லின்றியமையாது. இன்று திகழ்கின்றதாய் நாளைக்கு மொளிகிளர்வதாய் வளர்கின்ற வாழ்வோ, மற்று நேற்றே நோயுற்றுடைந்துபோன வொன்றோ நாம் வேண்டுவது! இவை கிடக்கத் தன்வகுப்பு மாணவருள் இளையவனின் இளையோனுய்த் தானிற்கும் போதகனைப் படைத்தளிக்கப் பாருங்கள்.

ஆயின், சுடர்விரி யற்புதப் பெருவெளி விண்ணில் அடர்பனிமறைக்கவுங் காண்கிலா தமையுமக் கடவுளாலயம் நிறுவிய சிகரம் நெடியது தூரமாய் நிற்கவும் நாமோ, பொய்யாய பொன்கொண்டு இந்நாள் வீணழகு செய்துவருகின்ற ஏணியினதடிப்படியின் முதற்கொண்டு தடுமாறுத் தான் வைக்கத் தேர்ந்தவர்தாம் அவோமே.

---

இக்கட்டுரையி லடங்கியுள்ள ஆழ்ந்த கருத்துக்களை நாம பாராட்டுகின்றோம். எனினும் சிறுவர் பெறும் கல்வியே உயிர்நிலையன்றென்றும் பாடமுறைகளை மாற்றுவதொன்றுமே யமையாதென்றும் சென்றவாரத்தில் எமது தலையங்கத்திற்காட்டிய கருத்துக்களும் உடன்வைத்துக் கருதத்தக்கன.

ஆசிரியர்.



# பிரெடெரிக் நீஷேயன்.

(334-வது பக்கத் தொடர்ச்சி.)

அத்தேசத்தில், ஒவ்வொரு இளைஞனும், ஒருவருடகாலமாவது போர்முறை கற்பிக்கும் பள்ளிகளிற்சேர்ந்து, சமர்நூல் படித்துப் பயிற்சிக்க வேண்டுமென்ற சட்டம் இருந்ததால், 1867-ம் ஆண்டில், தன் மனமிசையாவிட்டாலும், சட்ட நிர்ப்பந்தத்தினால், ஓர் சைன்னியத்திற் சேர்ந்தார். குதிரை சவாரிசெய்வதில் தீர்க்கராணுராம்; மேலும், நல்ல யுத்தவீரர்க்குரிய குணநடத்தைகள் பொருந்தியவராய் விளங்கினராம். ஒருநாள், குதிரை மீது ஏறுகையில், தவறி விழுந்து, மார்பிலடிபட்டு அவதிப்பட்டனராம். இவ்வேலையினின்று நீங்கி, வேறிடத்திற்குச் சென்று படிக்கையில், பற்பல விஷயங்களில் பிரவிர்த்தித்து உழலாது, ஏகாக்கிர மனத்துடன், ஒரே விஷயத்தைத் தீர்க்கமாக ஐயந்திரிபற அறிதலே உத்தமமென வுணர்ந்தனராம்.

இச்சமயத்தில், யாவராலும் சிலாகிக்கப்பட்ட வாக்னர் என்ற இன்னிசைவாணனுடன் நட்பு உண்டாகி, எழிற்கலைகளின், முக்கியமாக, சங்கீதத்தின் பெருமையை உணர்ந்தனராம். இவர் அவனை ஓர் நிகரற்ற வரப்பிரசாதி யென மதித்து, அவனைத் தன் குருவாகக் கொண்டு, அவனுடன் பழகினராம். அவனும், அவனுடைய மனைவியும் இவருடைய குணவொழுக்கங்களையும், கல்வித் திறமையையும், பாடற் பயிற்சியையும் நோக்கி வியந்து, இவரை மிக்க அன்புடன் பராமரித்து வந்தார்களாம். எனினும், நாளடைவில், நெருங்கிய பழக்கத்தால், ஒருவர் மற்றவரின் குற்றங்குறைகளையே கவனிக்க ஆரம்பித்ததாலும், வாழ்க்கை லக்ஷியங்களைப்பற்றி அவர்களுக்குள் வேற்றுமை யேற்பட்டதாலும், இவர் அவனை வெறுத்து, அவனிடமிருந்து பிரிந்தனராம். இம்மட்டோ? பின், அவனை அதி உக்கிரத்துடன் தூற்றி எழுதவும் ஆரம்பித்தனர்!

பேஸிலுள்ள கலாசாலையில், கிரேக்கர்களின் பாஷாதத்வ உபந்நியாசகராக நியமிக்கப்பட்டு, 1869-ம் வருடம் மே மாதத்தில், ஹோமர் என்ற கவியின் திறத்தைப் பற்றி முதற் சொற்பொழிவு நிகழ்த்தினராம்.

1870-ம் ஆண்டில், பிரென்சுக்காரர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் யுத்தம் சம்பவிக்கவே, இத்தருணத்தில், இவர் அந்நிய ஆட்சியின் கீழ் வேலை பார்த்து வந்ததால், ஜெர்மானியர்பக்கஞ் சேர்ந்து போர்புரியக் கடமைப்பட்டுள்ளவரல்லராயினும், ராஜாங்கத்தினரிடமிருந்து அநுமதிபெற்றுச் சமர்க்களத்தில், காயமடைந்தவர்க்குச் சிகிச்சை செய்பவர்களி லொருவராக அமர்ந்தார். ஒரு சமயத்தில், காயமடைந்தவர்களைச் சேர்த்து ஜெர்மானிக்கு இவர் அழைத்து வருகையில், வழியில் இரத்தபேதி கண்டு, தொண்டநோய் கொண்டு அவஸ்தைப்பட்டனர். யுத்தபூமியில் நிகழ்ந்த அட்டகாசங்களையும், அகால துர்மரணங்களையும், தனக்குண்டான அவதிகளையும் பார்த்துப் பீதியடைந்து, பின் அவைகளைப் பற்றிப் பேசுவதும் நினைப்பது மில்லையாம்!

அந்நோய்கள் பாதி சொஸ்தமானவுடன், அவமே காலங் கழிக்காது எப்பொழுதும் ஏதாவது தொழில் புரிந்து கொண்டே யிருக்கவேண்டுமென்ற ஆதர்சமுடையவராதலால், மீண்டும் பழைய வேலையை மேற்கொண்டு உழைக்க வாரம்பித்தார். ஆதலால், அவ்வியாதிகள் மும்முரத்துடன் பெருகித் தலைவலி, தூக்கமின்மை, கண் உபாதி, அஜீரணம் முதலானவைகளுக்கு இவரை உட்படுத்தி வருத்தினவாம்.

1900-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 25-ந் தேதியில், உடலைக் கழற்றி யெறிந்து இவருடைய ஜீவன் பறந்தது.

வாணாள் முழுதும் பற்பல பிணிகளால் பீடிக்கப்பட்டு வருந்தியதால், ஆர அமர்ந்து அதிகநேரம் எழுதுவதற்கும், விஷயங்களை முன்பின் ஆலோசித்துப் பார்த்துத் தட்டுத் தடைகளில்லாமல், ஒழுங்காகத் தெரிவித்தற்கும், வாழ்க்கைப் பிரச்னைகளைப் (Problems of existense) பூர்ணமாக ஆராய்ந்து, தீர்க்கமாக விசாரித்தறிந்து, அவைகளைப் பற்றிய தன் உறுதி முடிபுகளை ஒன்றன்பி னொன்றாகக் கோத்துத் தெளிவாக வெளிப்படுத்துவதற்கும் இவரால் முடியாமற் போயிற்று! இதர ஐரோப்பிய ஞானிகளைப் போலல்லாது சூத்திர நடையில், (Aphoristic Style) இவருடைய சித்தாந்தங்கள் வெளியிடப் பட்டிருப்பதற்கும் அதுவே காரணமாகும். ஆதலால், ஒன்றற் கொன்று முரணான கோட்பாடுகள் இவருடைய இலக்கியங்களில் விரவிக் கிடக்கின்றன. இவருடைய சித்தாந்தங்களிற் பெரும்பான்மையும் இவர் இயற்றிய பலநூற்களில் பற்பல விதமாகக் கூறப்பட்டு நிற்கின்றன. ஒரு நூலின் ஆரம்பத்தில் சொல்லிய விஷயங்கள், அதே புத்தகத்தில், வேறு பக்கங்களில், கண்டித்து மறுக்கப்பட் டிருக்கின்றன. மேலும், மனம் எப்பொழுதும் மேன்மேல் வளர்ந்து விசாலிக்கும் சக்திபொருந்தியது; வெவ்வேறு சமயங்களில், பலதிறப்பட்ட புதிய எண்ணங்கள் உதித்துவரும்; அவைகளை, உள்ளவாறே, முன்பின் ஒப்பிட்டுப் பார்த்து, முரணானவைகளை, விபரீதமாகத் தோன்றுபவைகளைப் புதுக்கியும் மாற்றியும் திரித்தும் விடுக்காது, வெளியிடவேண்டும்; படிப்பவர் அவரவர் திறமைக் கேற்றவைகளையே தெரிந்து கிரஹித்துப் பின்பற்ற வேண்டும் என இவர் கொண்டிருந்ததும் ஓர் காரணமாகும். இக்காரணங்களினாற்றான், இவருடைய சித்தாந்தங்களின் மெய்யியல்பை, உள்ளக்கருத்தை, முடிபுகளை வரையறுத்துக் கூற முடிவதில்லை. எனினும், மீட்டும் மீட்டும் வற்புறுத்தப்பட்டிருக்கும் விஷயங்களிற் சிலவற்றை, யாம் அறிந்தவரையிலும், இவ்விடத்தில் தெரிவிக்கத் துணிந்தோம். * அடியிற் காட்டிய இவருடைய இலக்கியங்களிலுள்ள விஷயங்களிற் சிலவற்றை, ஆரம்பத்தில், சங்கிரகமாகக் கூறியுள்ளோம். இன்னமும், எஞ்சி நிற்பனவற்றில், முக்கியமானவைகளை மாத்திரம் குறிப்பிட்டு, இச்சிறு வியாசத்தை முடிப்போம்.

மானுடனின் மெய்ச் சுபாவத்தை அறிவ தெவ்வாறு? இவ்வுலகாதிகளின் போக்கையுங் குணத்தையும் பற்றி நம்முடைய முடிபுகள் உண்மையென நிரூபிக்கும் கருவி யாது? இக்கருவிக்கும் உலகாதிகளுக்குமுள்ள சம்பந்தம் என்னையோ? வஸ்து - தோற்றம், அல்லது சத் - அசத் (Thing in itself, Noumenon, Reality, Being. Phenomenon, Appearance) என்பவைகளின் பொருள் என்னையோ? இப்பிரிவுகளுக்கு ஆதாரம் எங்ஙனதோ?

---

* Birth of Tragedy. Thoughts of season. Human, All-too-Human. The Dawn of Day. The Joyful Wisdom. Thus spake Zarathustra. Beyond Good and Evil. Geneology of Morals. Ecce Homo. The Twilight of the Idols. The Will to Power.

காண்பானில்லாது காட்சியில்லை; காட்சியென்பது காண்பானின் அகச் சக்தி விளக்கமே யாம் எனக் கூறுவர் ஒரு சாரார். (Idealists) காட்சிப் பொருள்களே காண்பானின் அகச்சக்தியை இயக்குவன; காட்சியில்லையாயின் ஞானமுமில்லை எனச் சாதிப்பர் மற்றொரு சாரார் (Materialists). ஞானம் ஞேயத்தையும், ஞேயம் ஞானத்தையும் குறிப்பிப்பதுபோலும்; இவ்விரண்டும் இணைந்து நின்று, ஒன்று மற்றதைத் தெளிவித்து நிருபிப்பதுபோலும். சுருக்கத்தில், ஞானம் - ஞேயம் - ஞாதுரு என்பன ஒன்று மற்றவைக்குச் சார்பாக, ஒன்று மற்றதின் தொடர்ச்சியாக நிற்பன. வஸ்து - சாயை, தோற்றம் - மூலப்பொருள், அகம் - புறம் என வகுப்பது சைதன்னியம்; அவைகளை இணைத்து, ஒன்றெனக் கூறுவதும் அதுவேயாம். அகச்சக்தி தன் இருப்பையும், உயர்வையும் இப்பிரபஞ்சாதிகள் மூலமாகத்தான் அறிகின்றது. இதினின்று புறப்பொருள்களையும், நிகழ்ச்சிகளையும் அகம் என்பது, கண்ணாடிபோல் பிரதிபலிக்கச்செய்யும் கருவியென முடிக்கக்கூடாது. அவைகளின் தாரதம்மியங்களை ஆராய்ந்து அறிந்து, தேவைக்குத் தக்கபடி மாற்றிக் கூட்டிப் பெருக்கிச் சிறுக்கி யேற்று விடுத்தற்கான குணம், அல்லது, சக்தி பொருந்தியதாம் மனிதனுள் உள்ள சைதன்னியம் என்பது. இதைச் சிருஷ்டி கர்த்தாவெனக் கொள்ளலாம். மாந்தர் அறிவு (Consciousness.) அல்லது சைதன்னியத்தை (Human Reason or Consciousness.) விட மிக்கமேலான அறிவு, அல்லது சைதன்னியம் (Super-Consciousness.) ஒன்று உளவாயின், இவ்வுலகாதிகளை அது வேறுவிதமாக உற்றாராய்ந்து உணரலாம்; நம்முடைய முடிபுகளுக்கும், அப்பேரறிவு அல்லது அபார சைதன்னியத்தின் நோக்கங்களுக்கும் வெகு வித்தியாசங்கள் தோன்றலாம்; எனினும், அவைகளைப் பற்றி அறுதியிட்டு உறுதி கூறுதற்கான சக்தி நம்மிடமில்லை. மானுடன் அறிவு மானிட சுவபாவத்தையே அறிய முடியும். எஞ்ஞான்றுஞ் சலிக்கும் - மாறும் - இவ்வுலகாதிகளின் தன்மையைத் தன்னுடைய உயர்வு தாழ்வு, வளர்ச்சி தேய்வு, சாதகம் பாதகங்களைப் பற்றிய சிந்தனை, பாவனை, அல்லது உணர்ச்சிக் கேற்றவாறே கிரஹித்து இருந்து வருகிறான். நன்மை தீமை என்பன விஷயாதிகளிலில்லை; மானுடனின் உணர்ச்சிக்குத் தக்கபடி அக்குணாதிசயங்களை விஷயாதிகள் ஏற்று நிற்பன; விஷயாதிகளின் அனுகூலமும் பிரதிகூலமும் மனிதனின் அநுபவங்களைப் பொறுத்துள. அநுபவ மூலமாகத்தான் இவ்வுலகாதிகளை நல்லன - தீயனவென வகுத்து, தனக்கானவைகளைக் கொண்டு, ஆகாதவைகளை விடுத்து ஒவ்வொரு மனிதனும் தன் வாணாளைச் செலுத்தி வருகிறான்; உபயோக தத்வத்தை (Utilitarianism.) தழுவியவர் நமது நீஷேயன்.

உலகம், உலகாதிகளின் ஆரம்பம், முடிபுகளையும், நன்மை தீமை என்ற கற்பிதங்களையும் புறத்தே தள்ளி, ஒருவன் நிஷ்களங்க மனத்துடன் இவ்வுலகின்மீது தன் நேத்திரங்களையோட்டி உற்றுப் பார்ப்பானாயின், ஒவ்வொரு ஜீவனும் ஒவ்வொரு பிராணியும் ஒவ்வொரு மனிதனும் சுயசக்தி சுயநன்மைகளையே முன்னிட்டு உழைப்பதை உணர்வான். சுயசக்தியும் சுயநன்மையையும் பெற்றபின் உண்டாகும் திருப்தியுணர்ச்சியே வாழ்க்கையின் லக்ஷியம், ஜீவனின் நோக்கம். கேவல வாழ்க்கையை யிச்சித்து (Will to live) ஜீவராசிகள் தோன்றியிருந்து பெருகிவருவனவல்ல; ஆனால், சக்தி பெற்று (Will to power) எழவேண்டும் என்பதே அவைகளின் அந்தரங்கக் கருத்தாகும். சக்தி என்பது அறம் மறம், நன்மை தீமைகளுக்கு மேலானது. (Beyond good and evil) நன்மை தீமைகளென்ற வரம்புகளுளவாயின், அவற்றின் மெய்க் குணாதிசயங்களையும் தாரதரங்களையும் பற்றிய திட அறிவு பன்னெடுநாள் முன்னமேயே உதித்திராதோ? இன்று இகழப்பட்டவை மறுநாள் புகழப்படுகின்றன; இச்சமயத்தில் தீதாக விளங்குவது அடுத்தநேரத்தில் நன்மையாகத் தோன்றுகின்றது! பற்பல சங்கங்கள் ஜாதிகள் காலங்களில் மாத்திரமோ அவ்வித்தியாசங்கள் தோன்றுவன? அல்ல, ஒவ்வொரு மனிதனிடமும் இருந்து வருவன! ஒரு சம்பவம், அல்லது அநுபவத்தையும், பொருளையும் ஒருவன் இத்தருணத்தில் துதிக்கின்றான்; அதே மனிதன், மற்றொரு சமயத்தில், அதே அநுபவத்தையும், பொருளையும் தூற்றுகின்றான்! இது யாவரும் அறிந்து ஒப்பிய விஷயமன்றோ? இவைகளினின்று நாம் தெரிந்துகொள்ள வேண்டியது யாதெனில், நன்மை தீமைகள் வீண் மனோபாவனைகள்; தன்னை மேலெழுப்புபவைகளை, அதாவது சதாகாலமும் நம்முள் உதித்து வருத்தும் பிரேமை விருப்பம் எண்ணங்களைப் பூர்த்திசெய்ய அனுகூலிப்பவைகளை நன்மை யெனவும், அதற்கு மாறானவைகளைத் தீமையெனவும் முறையே பாராட்டித் தூற்றி வருகிறோமென்ற விஷயங்களேயாம். ஆதலால், ஒவ்வொரு ஆன்மாவும் சக்தியை ஓங்கி வளர்க்கவேண்டும்; நாற்றிசையிலும் வியாபிக்கச் செய்யவேண்டும்; எதிர்ப்பவர்களை மாய்க்கவேண்டும்.

சக்திமான்கள் எழும்பவேண்டும், நரோத்தமர்கள் (Supermen) உதிக்கவேண்டும்எனப்பன்முறை இவர் ஓதிவந்தாராயினும், அவர்கள் எத்தகையர், அதாவது எக்குண நடத்தைகள் பொருந்தியவர், அல்லது பொருந்தியிருக்க வேண்டும் என்பதைப் பற்றி இவர் விளக்கவில்லை. இவர் ஆங்காங்குக் குறிப்பிட்டிருப்பவைகளை ஆலோசித்துப் பார்க்கையில், நீரோ (Nero) ராவணன் நபோலியன், ஜூலியஸ் ஸீஸர், ஸீஸர் போர்ஜியான், (Caesar Borgia) மகம்மத் போன்றவர்களையே சத்புருடரென இவர் எண்ணினரோவென ஐயுற நேரிடுகின்றது! எனினும், இவ்விஷயத்தைப் பற்றி, ஓர் இடத்தில், இவர் பின்வருமாறு உருவகப்படுத்தி விளக்கியிருக்கிறார்:—

மனிதனின் அகச்சக்தி மூன்றுவிதங்களில் தோன்றி, அல்லது மும்மாறுதல்களுற்று (The three metomorphosis of the Spirit.) உயர்ந்து பொலிகின்றது. அவையாவன: — ஒட்டகம் கோளரி, குழந்தையாம். பணிவு - பணி - கடமை என்பன முதல் நிலையின் குணாதிசயங்களாம். ஒட்டகம் மாந்தரின் சுமைகளைத் தாங்கிச் செல்கின்றது. இதற்குத் தேகபுஷ்டியும், கஷ்டநஷ்டங்களைச் சகித்தற்கான குணமும் அத்தியாவசியமாவன. மானுடருலகில், ஒட்டகத்தை யொத்தவர் எவரெனின், நியாயச்சட்டம் ஏற்படுத்துபவர் (Legislators.) சமூகஊழியக்காரர்கள் (Public Servants.) முதலானவர்களாம். இவர் கடமையால்தூண்டப்பட்டுப் பிறர்க்குப்பணிவுடனும்பொறுப்புடனும் தொண்டுசெய்பவர். இத்தொழிலே சக்தியிச்சையின்முதல் தோற்றமாகும். பின், சுமை பொறுக்கமுடியாதபொழுது, அல்லது சுமைதாங்கியாக இனி உலவக்கூடாதென ஒட்டகம் எண்ணும்பொழுது, சுமைகளைக் கவிழ்த்துப் பாலைவனத்திற்கு ஓடி விடுவதுபோல், அவ்வூழியர்கள் அறிவு முதிரவே, பராக்கிரமம் பெருகவே, "நாம் ஏன் பொறுப்புடன் கைகட்டி வாய்புதைத்துப் பிறர்க்குத் தொண்டுசெய்து வரவேண்டும்? நாமும் நம்முடைய அறிவு முதிர்ச்சியால் புஜபலத்தால் சுதந்தரம்பெற்றுச் சகல சுகபோகங்களையும் துய்த்து ஏன் இருக்கக்கூடாது? கடமை - ஊழியம் என்ற பூதங்களை அடித்துத் துரத்துவோம். இனி இஷ்டப்படி நடக்க யத்தனிப்போம்," இவ்வாறு வினவித் தீர்மானித்து அயலார்களையும் தாண்டி உண்மையை அவர்களுக்கும் புகட்டித் தேசமெங்கும் கலகம் விளைவிக்கத் தலைப்படுகின்றனர். நிர்ப்பயமாய் ஓடியாடித்திரியும் கேசரிகள்போல், இவர்கள் தேச நாகரிகத்தை அல்லோலகல்லோலப் படுத்திச் சிதைக்கின்றனர். விவேக விர்த்தி - அடங்காமை - சுதந்தரப் பிரியம் - மிதமீறிய செருக்கு முதலானவைகளே இரண்டாவது நிலையின் குணாதிசயங்களாம். தத்வக்ஞர் - ராஜாங்க நிபுணர் - பிரகிருதி சாஸ்திரிகள் - எழிற்கலைஞர் - சேனாதிபதிகளெல்லாரும் கோளரியை யொத்தவர்கள். ஒட்டகம் பாலைவனத்துள் ஓடிச் சிங்கமாக மாறிப் பின் யாவரையும் அச்சுறுத்திக் கலக்கித் தன் இஷ்டப்படி உலாவத் தலைப்படுதல்போல், அடக்க வொடுக்கங்கள் மிகுந்து விளங்கிய அப்பாவிகள் நாளேற நாளேற முரண்டு, பழமைகளைச் சீறியழித்து, நவீன வழிகள் ஏற்படுத்தி நிலைக்கச் செய்கின்றனர். எனினும், வெறுங் கலகமும், புரட்சியும், யுத்தமுமே எந்நன்மை பயக்கக் கூடும்? மேலும், அவை நெடுநாள் நீடித்து நிற்க வல்லனவோ? ஞானமும் செயலும், சுதந்தரப் பிரியமும், கட்டு அல்லது மிதமும், உரிமையும், கடமையும், ஒன்றையொன்று பிணைந்தல்லவோ செல்லவேண்டும்? ஆதலால், மூன்றாவதான குழந்தைநிலை தோன்றுகின்றது; அதாவது, வேண்டும் வேண்டாம், உயர்ந்தது தாழ்ந்தது, கடமை உரிமை, தொந்தம் நிர்த்தொந்தம், உள் வெளி, ஆட்சிபுரிதல் ஊழியஞ் செய்தல், வீரன் அடிமை என்ற வேற்றுமைகளில்லாது, மதியூகத்தால் சுயசக்திப் பெருக்கால் நிஷ்கபட மொழியால் சுயவெளியால் பிறரைத் தன்வசப்படுத்தி ஆட்சிசெலுத்தும் நரோத்தமன் காலக்கிரமத்தில் தோன்றுவனும்.

இவ்வுலகாதிகளை இயக்கும் சக்தி அநந்தமல்ல. எல்லையற்றதல்ல, எப்பொழுதும் மேன்மேல் சென்று கொண்டேயிருப்பதுமல்ல. அவ்வியக்கங்களின் அளவும் வல்லமையும், முடிபு ஒன்று உளவாயின், அம்முடிபும் கணிக்கத்தக்கனவாம். சமுத்திரத்தின் இயக்கங்களுக்கு அவற்றை ஒப்பிடலாம். அலைகளை யெழுப்பி யடக்கி யுருட்டிப் புரட்டி யமர்த்திவரும் சக்தியின் திறமையையும் நோக்கத்தையும் அளவு அல்லது வரம்பையும் நாம் அறிவோம்; அவ்வரம்பைக் கடந்து, பழைய இயக்கங்கள், அல்லது நிகழ்ச்சிகளைத் தவிர வேறெவ்வித அதிசய சம்பவங்களும் உண்டாவதில்லை. இவற்றில் எவ்வளவு சக்தியும் எக்கருத்தும் தோன்றுகின்றனவோ, அவ்வளவு சக்தியும் அவ்வளவு கருத்துக்களும், அல்லது அதேசக்தியும் அதேகருத்தும், ராஜாங்கங்கள்-குடிகள் - நாகரிகங்கள் முதலானவை எழும்பி, வியாபித்து, ஒடுங்குவதிலும் பிரசன்னமா யிருக்கின்றன. நாகரிகம் என்பது, இடைவிடாது, முன், அல்லது மேலாகவே, எஞ்ஞான்றும், தொடர்பாக ஏறிச் செல்வதல்ல; ஒவ்வொரு நாகரிகமும் ஓர் எல்லை - ஓர் நிலைமைக்கு ஏறியவுடன் படிந்து, மறுபடியும், பழைய படி, படிப்படியாக இயங்கிப் பெருகுவதுபோலும். (Doctrine of Eternal Recurrence.) இவ் விஷயங்களையும் நிகழ்ச்சிகளையும் உற்றுப் பிரமித்து மயங்கித் தயங்காது, இழிய பிரேமைகளை யொழித்துத் தைரியமாக அவைகளை நோக்கிக் கிரஹிக்கவேண்டும். விரிக்கின் பெருகும்.

இவருடைய கட்டுரைகளிற் சில :—

எத்தன்மையனாக விரும்புகின்றாயோ, அத்தன்மையனாக உழைப்பாயாக.

பலதிறப்பட்ட விஷயங்களை அரையுங் குறையுமாக அறிவதைவிட, ஒன்றையும் அறியாமலிருத்தல் மிக்க மேலானது.



உன் திறமைக்கேற்ற தொழிலையேற்று நிறைவேற்றுவாயாக.

பொய் சொல்ல அறியாதவன் உண்மையறியான்.

இழிய சிந்தனையைவிடத் தீக்கருமம் சிறப்புற்றது.

பிறரை ஒறுக்கவேண்டுமென எண்ணுபவர்களை நம்பாதே.

உன் மனமும் உள்ளமும் உவந்து செய்யும் வேலையே உன் லக்ஷியம் சக்தி லீலை யென அறிவாயாக.

பிறர்க்கு ஹிதம் செய்யாதவன் தான் மாத்திரம் அன்னியரிடமிருந்து ஹிதத்தை எதிர்பார்த்தல் மதியீனமாகும்.

வலி வருத்தம் இடையூறு இடுக்கண்கள் வாயிலாகத்தான் ஞானம் சுரக்கின்றது.

வாழ்க்கையின் கொடூர அவதிகளெல்லாம் ஜீவன் சுகித்து இனித்திருக்கும் பொருட்டேயாம்.

வாழ்க்கை இன்னல்களை ஒருவன் எம்மட்டும் பொறுக்கிறானோ, அம்மட்டும் அவனுடைய மேன்மை ஒளிர்கின்றது.

கபடப் போலித் துக்கத்திற்குச் சிறந்த ஔஷதம் மெய்த்துக்கமே யாம்.

குற்றத்தைவிட சிக்ஷையே அதிகம் கெடுக்கவல்லது.

தன் சுவபாவத்தை யொட்டி நடவாதவனே பிறரால் ஆளப்படுவான்.

கீழ்ப்படிதலைவிடப் பிறர்மீது ஆட்சி செலுத்தல் மிக்க கஷ்ட சாத்தியமானது.

குழப்பத்தினின்றே சீர்மை உண்டாகின்றது.

எதினின்று விடுபடவேண்டுமென்பதல்ல; எதற்காக விடுதலை பெறவேண்டும் என்பதே மெய்த் தத்துவப் பிரச்னை.

எவ்வளவு இடையூறு - இடுக்கண்களை எதிர்த்து - அடக்கிச் சுயத்வத்தை ஒருவன் வெளியிட்டனன் என்பதே, சுதந்தரத்தின் அளவுகோலாகும்.

நேர்மை, அல்லது வாய்மையே ஜீவனின் தீபமாகும்.

உன் செய்கைகளின் மூலமாக உன்னுடைய அக அமைப்பையும் போக்கையும் தெளிவிப்பாயாக.

அறம் என்பது சன்மார்க்கத்தால் ஸ்தாபிக்கப்படுவதல்ல.

சுய சுகபோக சிந்தனை அல்லது தீயகருமங்களாலல்ல; ஆனால், மௌட்டியத்தினாற்றான் பற்பல ஜாதிகள், குடிகள் சீர்கெடுவன.

குற்றஞ்செய்தல் அல்லது தவறுதல் எவரையும் களங்கப்படுத்துவதில்லை யாதலால், எத்தண்டனையும் தூய்மைப் படுத்துவதில்லை, சீராக்குவதில்லை.

எவ்வளவுக் கெவ்வளவு மூடபக்தி ஒடுங்குகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு சற்குண நடத்தைகள் பெருகிப் பரவும்.

கேவலப் பொருள்களை மறைக்கும் துகிலாம் எழிற்கலை.

ஒருகோயில் கட்டுதற்கு மற்றொரு கோயில் இடிக்கப்படவேண்டும்.

சக்தி பெருகுகின்றது, இடையூறுகள் வெல்லப்படுகின்றன என்ற உணர்ச்சியே இன்பமாகும்.

மூட நம்பிக்கையே கொடுஞ் சிறைச் சாலையாகும்.

பொருட்செல்வமே சக்தியைச் சிதைக்கக் கூடிய கன்னக்கோல்.

பாபம் சிக்ஷை என்றவைகளே மாந்தரைக் குழப்பி நிலைதவறச் செய்வன.

தான் நியன் என்ற பாவனையை ஒருவன் ஒழிப்பனுல், அறவோனுகலாம்.

மாந்தரிற் பெரும்பாலாரும் பிதற்றி அநுஷ்டித்து வரும் அறநெறிகள் கியாதி பெற்ற மருந்துகளுக்குச் சமமானவை; அதாவது, அவ்விரண்டிலும் முறைமை, அல்லது ஒழுங்கில்லை, மெய்யாய நற்பயன் உண்டாவதில்லை.

மெய், அல்லது சத்தியம் என்பது கண்டுபிடிக்கப் படுவதல்ல ; ஆனுல் சிருஷ்டிக்கப் படுவதாம்.

முடிவுரை:—ஐரோப்பியமத தத்வக்ஞர்களுக்கும் ஹிந்து ஞானிகளுக்கு முள்ள மிக்க பிரதான பேதம் யாதெனில், முன்னவர்களிற் பெரும்பாலாரும் தார்க்கிக - வியவகாரிக ஞானமுடையவர், பின்னவர் சுயாநுபோகிகள் என்பதேயாம். முற்றுண்மை என்பது தர்க்கத்தின் மூலமாக மாத்திரம் அறிந்து அநுபவிக்கக் கூடியதல்ல ; அநுபவமும் சுயஞானமும் (Intutions) அத்தியாவசியமாவன. புத்தியும்தர்க்கமுறைமையும் உலகாதிகளின் பல்வேறு குணதிசயங்களை ஆராய்ச்சி முறைமையால் உற்றுநோக்கத்தால் நிரூபிப்பன; உள்ளுணர்வு (Conception)என்பது புத்தியின் வாயிலாக உலகாதிகளை அறிந்து, அப்புத்திக்குக் கஷ்டசாத்தியமான ஒன்றுபடுத்துஞ் சக்தியும், இப்பிரபஞ்சாதிகளுள் ஊடுருவிப் பாய்ந்து பரிணமித்து நிற்கும் வாய்மை நன்மை இனிமைகளை (The True The Good The Beautiful.) விளக்குதற்கான சக்தியும் பொருந்தியது. ஐரோப்பிய ஞானிகளின் நூற்களை எம்முறை படிப்பினும், உள்ளுறுதியும் தெளிவும் சாந்தியும் உண்டாவதில்லை. புத்தியின் அறிவும், பிரேமையின் உணர்ச்சியும், புலன்களின் செயல்களும் கூடிக்கலந்து, மனோவாக்குகளுக்கதீதமான பரஞானத்தை அனந்த நன்மையை கோசரிக்கக்கூடாத இன்பை முழு உண்மையை நமக்கு உணர்த்துவன.

சுருக்கத்தில், மேற்சொல்லிய நீஷேயனின் ஜீவசரிதத்தைப் படித்தவர்கள் அவரை ஓர் பெரிய ஞானியெனக் கொள்வதற்கு ஆதாரம் என்னையோவென வினவலாம். உலகாதிகளின் இருப்பையும், போக்கையும் பயனையும் ஓர்ந்தாராய்ந்து பார்த்தறிய விரும்புகிறவர்களும் முயற்சிப்பவர்களும் ஞானிகளென்பது மேனுட்டினரின் கொள்கையாகும். இந்திரிய நிக்ரஹம் மன அடக்கம் பொறிகள் ஒடுக்கம் பலன்களின்மீது ஆசையற்றுத் தொழில்புரிதல் முதலானவைகளை அவர்களிற் பெரும்பான்மையரும் அங்கீகரியாதவர்கள், ஸ்பஷ்டமாக அறியக்கூடியவர்களுமல்ல. ஏனெனில், அவர்கள் கையாளும் முறைமையும், ஞானம் - கர்மம் - தர்மங்களைப்பற்றிய அவர்களுடைய உள்ளக்கருத்தும் இம்மைச் சுகபோகங்களிலே புகுத்தி அவைகளையே முன்னிட்டுத் தத்தளிக்கச் செய்வதேயாம். இவருடைய கொள்கைகளுக்கும் அத்வைதிகளின் சித்தாந்தங்களுக்கும் சிற்சில ஒற்றுமையுண்டு. விரிவஞ்சி விடுத்தனம்.

முற்றிற்று.

T. R. இராஜகோபால்.

189001

# வர்த்தமானம்.

சிந்து நதியில் வெள்ளப் பிரவாகத்தால் சுக்குரில் கட்டப்பட்டிருக்கிற பெரிய அணையில் ஒருபாகம் உடைந்துபோனதாகத் தெரிகிறது. இதனுல் நஷ்டம் அதிகம் இல்லையாம்.

***

பர்தோலியில் வரிகொடுக்காதஇயக்கம் அதிகக் கட்டுப்பாட்டுடன் நடக்கிறது. கவர்ன்மெண்டு சப்தி செய்வதற்காகப் பிரத்தியேக உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள். ஜனங்கள் எல்லாரும் மிகவும் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்கிறார்கள்.

***

பம்பாய் நெசவுத் தொழிற்சாலைகள் வேலைநிறுத்தம் இன்னும் ஒருமுடிவுக்கும் வரவில்லை. பம்பாய் கவர்னர் இதன் காரணமாகப் பம்பாய்க்கு வந்து இதை ஒழுங்கு செய்வதற்கு வேண்டிய எத்தனங்கள் செய்துகொண்டிருக்கிறார். தொழிலாளருக்குள் இருந்த இரண்டு கட்சிக்கிடையில் ஒருவகையான சமாதானம் ஏற்பட்டிருக்கிறது. ஆனுல் இவ்வேலைநிறுத்தத்தின் முடிவு எப்போது வரும் என்று சொல்லமுடியாது.

***

மசூதிகளுக்கு முன்னுல் வாத்தியங்கள் வாசிக்கக்கூடாது என்பதைப் பற்றிப் பரோடா அரசாங்கத்தார் முப்பது வருஷங்களுக்குமுன் பரோடாஐக்கோர்ட் தீர்ப்பொன்றை ஆதாரமாக வைத்து அவ்விதம் வாத்தியங்கள் வாசிப்பதற்கு ஒருவகையான தடையு மிருந்ததில்லை என்றும் ஆகையால் இனிமேலும் ஒருதடையுமில்லாமல் மசூதிகளுக்கு முன்னுக வாத்தியங்கள் வாசிக்கலாமென்றும் இதைத் தடைசெய்பவர்கள் தண்டனைக் குள்படுவார்கள் என்றும் பரோடா அரசாங்கத்தாரால் முடிவு செய்யப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

***

இந்தியாவின் விதி என்னும் தலைப்பின்கீழ் C. F. ஆண்ட்ரூஸ் என்பவர் 'நாளைய உலகம்' என்னும் பத்திரிகையில் எழுதியிருக்கும் வியாஸத்தின் முடிவாக அவர் சொல்வதாவது. "இதுவரையிலும் பிரித்தானிய அன்னிய அரசாட்சியின் பிரயோசனம் இந்தியாவுக்கு என்னவா யிருந்தபோதிலும் அது விரைவாய் முடிவுக்கு வந்துகொண்டே யிருக்கிறது. இப்போது வந்திருக்கிற சீர்திருத்தங்கள் ஒன்றும் காலத்துக்கு முன்வரவில்லை. அவைகள் மிகவும் பிந்தியே வந்திருக்கின்றன. இப்பவும் சீக்கிரத்தில் முற்றாய் மாற்றம் அடையாவிட்டால் அமைதியாய்ச் சீர்திருத்தங்கள் நடைபெறுவ தென்பது முடியாத காரியம்."

***

மிதக்கும் டொக் இன்னும் இரண்டு மாதத்திற்குள் இங்கிலாந்தில் டைன் என்னும் இடத்திலிருந்து சிங்கப்பூர் துறைமுகத்திற்குக் கப்பல்களைப் பழுதுபார்ப்பதற்கு வேண்டிய ஒரு டொக் ஒன்று வேலை முடிந்து கடல்மேலே இழுத்துக் கொண்டுவா விருக்கிறார்கள். இதை இரண்டு பாகங்களாய்ப் பிரித்துக்கொண்டு வந்து சிங்கப்பூரில் ஒன்றுகச் சேர்ப்பார்கள். இதன் நீளம் 855 அடி, அகலம் 172 அடி, ஆழம் 75 அடி, இதில் மிகப் பெரிய கப்பல்களையும் கொள்ளத்தக்கது. இதனிடத்தில் அமைக்கப்பட்டிருக்கிற தண்ணீர் இறைக்கும் யந்திரம் ஒருமணி நேரத்தில் 30000 டன் தண்ணீரை வெளியே இறைக்குமாம். இதுவே உலகத்திலுள்ள மிகப் பெரிய மிதக்கிற டொக்.

***

சைமன் கமிஷனுக்கு கல்வி விஷயங்களில் உதவி புரிவதற்காக ஏற்படுத்த விருக்கும் கம்மிட்டியில் டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாளும், ஸ்ரீமான் K.T. போல் அவர்களும் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

***

மோட்டார் வண்டிகள் ஒன்றோடொன்று மோதினுலும் அல்லது கால்நடையாய்ப் போகிறவர்களைத் தாக்கினுலும் வண்டிக்காவது அல்லது நடந்து செல்பவர்களுக்காவது ஒருவித அபாயமும் வராமல் தடுப்பதற்கு ஏற்ற ஒரு புதிய வழி ஜர்மனியில் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார்.இப்புது யந்திரம் முக்கியமாய் ஒரு கனமான ரப்பர் குழாய். இதை வண்டிக்கு முன் இணைத்து விட்டால் அபாயம் நேரிடுவதில்லையாம். இதைச் சோதிப்பதற்காக 28 மைல் வேகத்தோடு சென்ற ஒருவண்டி ஒரு மரத்தைத் தாக்கினபோது வண்டிக்காவது வண்டியிலிருந்தவர்களுக்காவது ஒருவிதமான அபாயமும் உண்டாகவில்லையாம். 20 மைல் வேகத்தோடு கூடிய இரண்டு வண்டிகள் ஒன்றை ஒன்று மோதினபோதும் ஒருவகையான தீங்கும் சம்பவிக்கவில்லையாம்.




(6) ஸ்ரீமத் வால்மீகி

இராமாயண வசனம்.

பண்டித நடேச சாஸ்திரியாரால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு
தகுந்த தமிழ் வித்துவான்களால் பார்வையிடப்பட்டு
பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

இப்பதிப்பின் விசேஷம்

தமிழிற் கம்பர் முதலிய மகாகவிகள் இராமாயணத்தை இயற்றி யிருந்தபோதிலும், செய்யுள் நடையை அறிந்து படித்து ஆனந்திக்கிறவர்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறபடியால் ஸ்திரீகளும், சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ் வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் நன்றாய்ப் பரிசோதித்து, வெகுபொருள் செலவிட்டு, சிரத்தையுடன் மிகச்சிறப்பாய் அச்சிட்டு அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் | 244 பக்கம் | | 6 காண்டம் |
| அயோத்தியாகாண்டம் | 501 | ,, | |
| ஆரணியகாண்டம் | 254 | ,, | |
| கிஷ்கிந்தாகாண்டம் | 226 | ,, | ரூ 15 |
| சுந்தரகாண்டம் | 260 | ,, | |
| யுத்தகாண்டம் | 702 | ,, | |
| சுந்தரகாண்டம் தனியே | | | ரூ. 2 4 0 |

கே. மஹாதேவன், புஸ்தக வியாபாரம்,
1, ராமசாமிபிள்ளை தெரு, வேப்பேரி, சென்னை





லோகோபகாரி

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினுல் லோகோபகாரிக்குச் சந்தா தாராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திக ளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாய் வெளி வருகிறது. முப்பத்தி நான்காவது ஆண்டு நடக்கிறது. பத்திராதிபர்: பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை. வருஷ சந்தா ரூபாய் 4. வெளிநாடுகளுக்கு ரூபாய் 6.

லோகோபகாரி பத்திரிகாலயம்
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.
மாதிரிப்பிரதி இனம். (7)



யுனைடட் இந்தியா லைப் அஷ்யுரன்ஸ்
(2) கம்பனி, லிமிடெட்.

ஹெட் ஆபீஸ் : சென்னை] [1906-ளுலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

பாலிஸிஹோல்டர்களுடைய ட்ரஸ்ட்
பண்ட் சுமார் ரூபா 25 லக்ஷம்.
சேர்மன்:—Sir. M. Ct. முத்தய்ய செட்டியார்.

நிர்ப்பயமானது, பேருதவிசெய்வது:—வட்டிக்கு விட்டிருக்கும் தொகையாவும் பத்திரமாயிருப்பதும், பாலிஸிஹோல்டர்களுக்கு வேண்டிய உதவி அன்போடு ஒழுங்காகச்செய்து தருவதும் இந்த யுனைடட் இந்தியா கம்பனிக்கு உள்ள சில முக்கிய அங்கங்கள்.

யுனைடட் இந்தியா கம்பனி சென்னையில் இருப்பது. ஆனுல் அதன் கீர்த்தி இந்தியா முழுவதும் பரவியுள்ளது. உயிர் அஷ்யுரன்ஸ் கம்பனிகளில் இந்த யுனைடட் இந்தியா கம்பனியானது, "மிகுந்த பலமானதென்றும் பழுதற்றதென்றும் ஒழுங்காயும் மட்டுதிட்டக் கவனத்தோடும் நடத்தப்படுவது" என்றும், இந்த விஷயங்களைச் சீர்தூக்கி அறியவல்ல பேரறிஞர் வேறுமாகாணத்தைச் சேர்ந்தவர் கருதுகின்றார்.

காலதாமதம் செய்யாமல் சேரவேண்டியதை அவரவர்களுக்குச் செலுத்திவிடுவது: காரியங்களை மிக்ககவனத்தோடு நிர்வாகம் செய்வது. தாராளமாயும் நியாயமாயும் ஏற்படுத்தியிருக்கின்ற பாலிஸி நிபந்தனைகள்: மிதமான பிரீமிய கட்டணம்: தகுந்த போனஸ்: இவைகளும் இவைபோன்ற வசீகரமான மற்ற குணங்களும் யுனைடட் இந்தியா கம்பனியை ஒருவிதத்திலும் குறைவில்லை என்று ஜனங்கள் கொண்டாடத் தக்க ஒரு உயிர் அஷ்யுரன்ஸ் கம்பெனியாகச் செய்து வைத்து இருக்கின்றன.

முக்கியமாக தென் இந்திய ஜனங்களுக்கு உபயோகம் ஆகும்பொருட்டு ஏற்படுத்தியிருப்பது தென்னிந்தியா முழுவதிலும் இந்த யுனைடட் இந்தியா கம்பனி ஒன்றுதான் என்று சொல்லலாம். மிக்க ஒழுங்காகவும் அநுதாபத்தோடும் இங்கே தன் வேலையைச் செய்து வரவேண்டுமென்று இந்தக் கம்பனி எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது.

இதைப்பற்றி முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டுவோர்க்குக் கேட்டவுடனே யாவும் தெரியப்படுத்துவோம்.

தபால் பெட்டி 281,
10, மக்லீன் தெரு, சென்னை.

ஸ்டார் அண்டு கம்பனி
மானேஜர்கள்.

(1) இண்டஸ்டிரியல் & புருடன்ஷியல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ஸ்தாபனம்] தலைமை ஆபீஸ் : பம்பாய். [1913

நன்கு மதிக்கப்பெற்று விருத்தியடையும்

இந்திய லைப் ஆபீஸ்.

போர்டு ஆப் டைரக்டர்கள்.

Sir. லல்லுபாய் ஸமால்தாஸ் K. T. C. I. E. (சேர்மன்) Sir. சிமன்லால் H. ஸெதால் வாட் K. C. I. E.
Sir. ஹுகும் சந்து ஸரூப் சந்து K. T. வேல்ஜி லக்ஷிமி B. A. L. L. B.
மோடிலால் C. ஸேதால்வொட், அட்வகேட் பம்பாய். லால்ஜி நாராயண்ஜி J. B. மில் சொந்தக்காரர்.

கம்பெனியின் முதல் இரண்டு சேர்மன்களும், காலஞ்சென்ற ஸர். பிரோவஷா எம். மேத்தா M. A. L. L. D. K. C. I. E. யும் காலஞ்சென்ற ஸபூர்ஜி புரோச்சா K. T.

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2,21592.
வசூலிக்கப்படாத மூலதனம் ரூ. 16,25000.

1. பறி முதல் செய்யப்படாத இயற்கையாகவுள்ள உரிமைகள்
2. பாலிஸிஹோல்டர்களே நேரில் கண்காணிப்பதற்காக அவர்களுக்கு இரண்டு டைரக்டர்கள் தேர்ந்தெடுக்க உரிமை.
3. குறைந்த அளவு செலவு.
4. பாத்யதைகளை உடனுக்குடன் பைசல் செய்வது.

நல்ல கமிஷனில் வேலை செய்ய, எல்லா விடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.
விவரங்களுக்கு எழுதவும்:—

நாராயிண் தாவ்ஸ் கிர்தர் தாவ்ஸ்,
உள்ளூர் மானேஜர்,
நெ. 10 மக்ளீன் தெரு, மதராஸ்.

Dr. Orison Swett Marden's
World-Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for; To succeed in your chosen calling; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers — Diverted by salary — Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty.

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence — Health-building during sleep — Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease — Killing emotions — Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master — Trifles — Courage — Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement — The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

**Special Indian Edition Rupee 1-8-0 each**

V. KALYANARAM IYER & Co.,
BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

**Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)**